Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-1471)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 23 (21.09.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 351

# சந்திரிகாவின் விசேட உத்தரவின் பேரில்

# மஹிந்த ராஜபக்ஷ திருமலைக்கு விஜயம்!



## பாதுகாப்பு நிலவரங்களை நேரில் ஆராய்ந்தார்

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட உத்தரவின் பேரில் - திருமலை பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து நேரில் ஆராய்வதற்காக, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அங்கு விஜயம் செய்தார். அவர் படையதிகாரிகளைச் சந்தித்து அங்குள்ள நிலவரங்கள் குறித்து விரிவாகக் கேட்டறிந்ததாகத் தெரியவருகிறது.**

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது - திருமலை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள 22 ஆவது டிவிஷனின் படையதிகாரிகள் மற்றும் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தினார்.

இந்தச்சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நீடித்ததாகத் தெரியவருகிறது. இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வசந்த கருணகொட, 22 ஆவது டிவிஷன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



நிலைமையைச் சிக்கலாக்க அம்மா தீர்மானிச்சிட்டாவோ...?

## தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்த

# சர்வதேச நிதிநிறுவனப் பிரதிநிதிகள் நாளை கிளிநொச்சி செல்கின்றனர்!

(கிளிநொச்சி)

சர்வதேச நிதி நிறுவனங்களின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் இலங்கைக்கான பிரதிநிதிகளே நாளை தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ... டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்கள் நடத்தப்படலாம் எனத் தெரியவருகிறது.

சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கடந்த பெப்ரவரி மாதத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று பயிற்சி விமானங்களை சீனா இலங்கைக்கு வழங்கும்!

## அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் உறுதிமொழி

இலங்கை வந்துள்ள சீனக் கைத்தொழில் விஞ்ஞான தொழிற்துறை தேசிய பாதுகாப்புத் துணை அமைச்சர் சாங் வெமின் நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்குமிடையேயான நீண்டகால உறவை நினைவுகூர்ந்த சீன துணை அமைச்சர் இலங்கைப் படையினருக்கான பலத்தை அதிகரிப்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்யவிரும்புவதாகவும் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட மாநாட்டில் வடபகுதி கடற்படை அதிகாரிக்கு அழைப்பில்லை!

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் படும் இன்னல்கள் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப் ... அமைச்சு நடத்திய மாநாட்டுக்கு வடக்கு கடற்படைக் கட்டளை அதிகாரி அழைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

... பட்டிருக்கவேண்டும். ஆனால், இவருக்குப் பதிலாக கடற்படை நடவடிக்கைகளுக்கான இயக்குநர் அழைக்கப்பட்டிருந்தார்.

## ஜே.வி.பியின் முக்கியஸ்தரைக் கொல்ல கொழும்புக்கு புலிகளாம்!

ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோரைக் கொலை செய்யும் நோக்கோடு 3 விடுதலைப் புலி உறுப்பினர்கள் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு வந்துள்ளனர்

கள் நாளை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் இலங்கைக்கான பிரதிநிதிகளே நாளை தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு மற்றும் அபிவிருத்தித் திட்

சர்வதேச நிதி நிறுவனங்களின்

நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மிடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்

பதற்குத் தேவையான உதவிகளைச் செய்யவிரும்புவதாகவும் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட மாநாட்டில் வடபகுதி கடற்படை அதிகாரிக்கு அழைப்பில்லை!

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் படும் இன்னல்கள் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் பாதுகாப்பு அமைச்சு நடத்திய மாநாட்டுக்கு வடக்கு கடற்படைக் கட்டளை அதிகாரி அழைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண இராணுவத் தளபதி, வடக்கு விமானப்படை ஆணையிடும் அதிகாரி போன்றவர்கள் கலந்துகொண்ட மாநாட்டுக்கு கடற்படை ஆணையிடும் அதிகாரி அழைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இவருக்குப் பதிலாக கடற்படை நடவடிக்கைகளுக்கான இயக்குநர் அழைக்கப்பட்டிருந்தார்.

மாநாடு நடந்த நேரத்தில் வடக்கு கடற்படை அதிகாரி கொழும்பில் இருந்தபோதும மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

## ஜே.வி.பியின் முக்கியஸ்தரைக் கொல்ல கொழும்புக்கு புலிகளாம்!

ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோரைக் கொலை செய்யும் நோக்கோடு 3 விடுதலைப் புலி உறுப்பினர்கள் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு வந்துள்ளனர் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

கொக்கட்டிச்சோலையில் இருந்து கடந்த 15 ஆம் திகதி இவர்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் வான் விபத்துக்குள்ளாகி ஈழ அகதிகள் நால்வர் பரிதாப மரணம்!

தமிழ்நாடு - சேலம் மாவட்டத்திலிருந்து சென்னை நோக்கிச் சென்ற வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் இலங்கை அகதிகள் நால்வர் உயிரிழந்ததோடு, 9 பேர் காயமடைந்தனர்.

சேலம் அகதிமுகாமில் இருந்து புறப்பட்ட வான், செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள மறைமலை நகரில் உள்ள புளியமரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளனது.

காயமடைந்த 9 பேரும் செங்கல்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழ், முஸ்லிம் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு

# கருணா - முஸ்லிம் பிரதிநிதிகள் நேற்றைய சந்திப்பில் இணக்கம்!



முஸ்லிம் பிரதிநிதிகளை வரவேற்கிறார் கேணல் கருணா.

தமிழ் - முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கும், தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வேண்டிய பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு - விடுதலைப் புலிகளும், கிழக்கு மாகாண முஸ்லிம் பேரவையும் இணங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு - கரடியனாறில் அமைந்துள்ள 'தேனகம்' விடுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற சந்திப்பின்போது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் கேணல் கருணா தலைமையில் சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாவா ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில் எம்.ஐ.எம். மொகைதீன் தலைமையில் ஐ.எம்.இப்ராகிம், எம்.எல். ஏ.ஜபார், யு.எல்.எம்.முபீன், வை.எம்.ஏ.காதர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# திலீபனின் அஞ்சலி நிகழ்வில் படையினர் துப்பாக்கி வேட்டு!

தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்ற வீதியில் மக்களின் மலரஞ்சலிக்காக நின்றது. அங்கு பெருமளவு மக்கள் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்திக்கொண்டிருந்த வேளை, அருகிலுள்ள இராணுவக் காவலரணிலிருந்த படைச் சிப்பாய் ஒருவர் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார். மக்களை அச்சுறுத்தும் முகமாக படைச்சிப்பாய் வேட்டுக்களைத் தீர்த்ததாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# தியாக தீபம் திலீபன் மரணிக்கவில்லை மக்கள் மனங்களில் என்றும் வாழ்கிறான்!

## அளவெட்டி மத்தி எழுச்சிப் பேரவை

(யாழ்ப்பாணம்)

திலீபன் இறக்கவில்லை அவன் காலத்தால் அழியாத வரலாற்று நாயகனாக தமிழ் மக்கள் மனங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். இவ்வாறு தியாகி திலீபன் நினைவுதினத்தையொட்டி அளவெட்டி மத்தி தேசிய எழுச்சிப்பேரவையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வறிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங் களைப் படைத்திருக்கிறது. பல அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. தமிழ் காத்து, எமது தமிழ் மண்மீட்டு, தமிழ்மானம் காத்து, மகத்தான அரிய செயல்புரிந்த மாவீரர் வரிசையில் சாத்வீக போராட்டத்திலே தன்னைப் பறிகொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்துள்ளான். அவனது தியாகம் தமிழீழ போராட்ட வரலாற்றில் பெரும் புரட்சிகரமான திருப்புமுனையை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகும். பாரத நாட்டை தலைகுனிய வைத்து, உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி என்பது உண்மை.

திலீபன் தமிழ் மக்களுக்காக, தமிழினத்தின் உரிமைக்காக, தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக இறந்தான். ஒரு இனத்தின் விடுதலைக்காக ஒருவன் எத்தகையதான தியாகத்தை செய்ய முடியுமோ, அத்தகைய அற்புத அர்ப்பணிப்பைத்தான் திலீபன் புரிந்தான். எனவே தான். திலீபன் ஓர் இலட்சிய நெருப்பாகத் தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றான். திலீபன் இறக்கவில்லை காலத்தால் அழியாத வரலாற்று நாயகனாக என்றும் தமிழ் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்ற திலீபனின் சிந்தனையின் கரு வளர்ச்சியடைந்து இன்று தமிழ் இனமக்கள் தாயகம் தேசியம், தன்னாட்சி உரிமை கொண்ட ஓர் அழகிய தமிழீழ குழந்தையை கைகளில் ஏந்த விடுதலைப் புலிகளோடு கைகோர்த்து எழுச்சியுடன் நடைபோடுகின்றனர். இந்த அணியில் நாமும் சேர்ந்து இறுதிவரை தமிழீழ இலட்சியத்துடன் உழைப்போம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தியாகிதிலீபன் நினைவு தின நிகழ்வுகள் குடாநாடுஎங்கும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது தெரிந்ததே. (68)

## காவியம் ஆனான் திலீபன்



அகிம்சை வழியினை தொடக்கிய பாரதம்
அகிம்சை வழியினை கற்றுக் கொண்டது
திலீபன் காட்டிய திண்மை மிகுவழி
கவிகள் நீக்கிடும் காவியம் ஆனது

தேரோடும் வீதியில் காவியம் ஆனான்
யாரோடும் நோகாத அகிம்சைப் போரிலே
கூரோடு மோதினான் குறித்தது வரலாறு - எதிரியை
வேரோடு வீழ்த்தும் வீரியம் கிடைத்தது

பன்னிரு நாட்களும் பச்சைத் தண்ணீரும்
தன்னிரு கைகளால் தொட்டே பார்க்காது
பன்னரும் புகழ்மிகு ஈழ நாட்டின்
தொன்மை சார் புகழ்தனை விளக்கி நின்றனன்

- கஜன்


## மலிவு விற்பனை

புத்துலகப் பிரவேசக் கண்காட்சியில் மில்க்வைற் உற்பத்திப் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற்
த.பெ.இல.77
யாழ்ப்பாணம்.

(சி-1475)


# உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் நடைபெற்றது. இப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு-

**14 வயதின் கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, இரண்டாம் இடம் - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, மூன்றாம் இடம் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

**16 வயதின் கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, இரண்டாம் இடம் - இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், மூன்றாம் இடம் - வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

**18 வயதின் கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - வசாவிளான் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம்- தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மூன்றாம் இடம் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி. (72)

## பெற்றோர் தின விழா

அச்சுவேலி புனித தெரேசான் மகளிர் கல்லூரியின் பெற்றோர் தின விழா இன்று காலை 10 மணிக்கு படசாலை மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி மரிய றோசாறியோ தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர்களும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (128)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஷ் வெற்றிக்கிண்ணத்திற்காக நடாத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்த 09 கழகங்கள் கலந்து கொண்டன. இவற்றில் மானிப்பாய் பரிஷ் அணியும், தெல்லிப்பளை யங்ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழமும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

ஆரம்ப சுற்றுப் போட்டிகளில் 30 ஓவர் பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக இந்தப்போட்டி அமைந்தது. இறுதிப் போட்டி 40 ஓவர் பந்துப் பரிமாற்றங்களை கொண்டதாக அமையுமென தெரிவிக்கப்படுகிறது.

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்.கோண்டாவில் கிழக்கில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் கூட்டுப் பிரார்த்தனையும் தெய்வீகப் பேருரைகளும் நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## கருத்தரங்கு

(மீசாலை)

தென்மராட்சி கல்விவலயத்திற்குட்பட்ட மாகாண மட்டப் பரீட்சை சம்பந்தமான செயலமர்வுக் கருத்தரங்கு நாளையதினம் பிற்பகல் 1.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வில் கணிதம், தாய்மொழி ஆகிய பாடம் தொடர்பான செயலமர்வு இடம்பெறவுள்ளதாலும், மாகாண மட்ட மதிப்பீடுகள் நடைபெறவுள்ளதாலும், தரம் மூன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.


ராஜா யாழ்ப்பாணம்.
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த
அன்பு
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
(சி-1424)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், ப்ரீதா நடித்த
தர்மா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ULTRA FORCE- 2
(சி-1425)




பார்வையில் பழுதுண்டா? பற்களில் பழுதுண்டா? பயம் எதற்கு? பொங்கிடும் பார்வையை பெற்றிடவும் உறுதியான அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிடவும்

எரிக்கணேஷ்

யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்

கிளைகள்:

பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இல.80 கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ்.வீதி
கொக்குவில் சந்தி, கொக்குவில்.

மூக்குக்கண்ணாடியகமும், பல்கட்டுமிடமும்
564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.2486 சி-1567


## யாழ்ப்பாணம்-மாநகரசபை அறிவித்தல்

குருநகர் மாட்டிறைச்சிக்கடை இல.2,5 நரிக்குன்று மாட்டி. கடை மற்றும் நாவாந்துறை மாட்டி. கடை இல.2 என்பவற்றை 01.10.2003 முதல் 03 மாதங்களுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்பட்டுள்ளது.

முடிவுத் திகதி 25.09.2003 ஆகும்.
மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம். 18.09.2003. (சி-1573)

இ.இராமலிங்கம், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

## பணவசதி குறைந்த சிறுவர்களின் மேலதிக சிகிச்சைக்கு உதவுங்கள்

குடாநாட்டு மக்களே! உங்கள் குழந்தைகளுக்கு உதவுவீர்களா?

இலங்கை வங்கி: 5-21-2022431-4 இல் அல்லது நேரடியாக நிதியுதவி புரியுங்கள்

அரும்புகள் சிறுவர் நிதியம் - யாழ்.மருத்துவ மாணவர் ஒன்றியம் - 021-222-2134

# ஜே.வி.பியின்றி ஆட்சியமைக்க முடியாது எனக் கூறுவோர் மீது கடும் நடவடிக்கை!

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சீற்றம்



(கொழும்பு)

ஜே.வி.பியின்றி ஆட்சியமைக்க முடியாதென்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பியின் ஒத்துழைப்பு இல்லாமல் ஆட்சியமைக்க முடியாது, வாக்குப் பலத்தைப் பெறமுடியாது என்றவாறாக - சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைப்பாளர்கள் பலர் கூறிவருகின்றனர்.

இவ்வாறு கூறிவருபவர்கள் மீது, கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு, சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பைப் பெற்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக, கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# விறுவிறுப்பாக விற்பனையாகும் பிரபாகரன் பற்றிய புத்தகம்!



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'ஆழங்காண முடியாத அகத்தினுள் பிரபாகரன்' **(Inside an Elusive Mind Prabakaran)** என்ற நூல், தற்போது பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுவரும் சர்வதேசப் புத்தகக் கண்காட்சியில் விறுவிறுப்பாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்நூலினை இந்தியாவின் பிரபல எழுத்தாளராகிய கே.ஆர். நாராயணசுவாமி எழுதியுள்ளார்.

புத்தக கண்காட்சியில் மூன்று தினங்களுக்குள் இந்த நூலின் ஆயிரம் பிரதிகள் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், மூவாயிரம் புத்தகங்களை விற்பனைக்குத் தருவிக்க, கொழும்பு விஜிதயாப்பா புத்தக நிலையம் தீர்மானித்துள்ளது.

இந்த நூலின் பிரதி ஒன்றுக்கான விலை 799 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# குரங்குப்பாஞ்சான் பகுதிக்கு கண்காணிப்புக்குழு செல்லும்!

திருகோணமலை குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான நிலைமைகளை அவதானிப்பதற்கு, போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அங்கு நேரில் செல்லவுள்ளது.

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரைகேவ் ரெலவ்சனுக்கும், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பை அடுத்தே, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு குரங்குப்பாஞ்சான் முகாம் அமைந்துள்ள பகுதிக்குச் செல்லவுள்ளது.

இதேவேளை - ஆனைவிழுந்தான், வெலிஓயா ஆகிய பகுதிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சென்று - அங்குள்ள குறைகளையும் அவதானிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பு - தூத்துக்குடி கப்பல்சேவை இந்தியாவின் கைகளிலேயே உள்ளது!

கொழும்புக்கும் - தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பற் போக்குவரத்தை ஆரம்பிப்பது தொடர்பாக, இந்தியாவே நடவடிக்கையில் இறங்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் - தூத்துக்குடிக்கும் இடையே கப்பற்போக்குவரத்து செய்வது தொடர்பாக, இலங்கை எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துவிட்டதாகவும், இந்தியாவின் நடவடிக்கைக்காகவே காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கப்பற்போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டால், இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் மேலும் விரிவுபடுத்தப்படும் வாய்ப்புக்கள் உருவாகும் எனவும் தெரிவிக்கப்டுகிறது.

தலைமன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பற் போக்குவரத்து, விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, கொழும்புக்கும் - தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பற் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளே இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.



திருமலை - மூதூர் கிழக்கில் கடத்திவரப்பட்ட 500 கிலோ கஞ்சா செடிகளை தமிழீழ காவல்துறையினர் கைப்பற்றினர். கைப்பற்றிய கஞ்சா செடிகளுடன் காவல்துறையினர் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம் கௌதமன்)

## வவுனியாவில்

# பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவுடன் கண்காணிப்புக் குழுவினர் பேச்சு!

(வவுனியா)

வவுனியா போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர்,நேற்றுமுன்தினம் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவினரை அழைத்து, கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலில்- கண்காணிப்புக் குழுவினர் ஏன் பொங்கு தமிழ் நடத்தப்படுகிறது, பொங்கு தமிழ் என்றால் என்ன, போன்ற வினாக்களை ஏற்பாட்டுக் குழுவினரிடம் கேட்டபோது, அதற்கான தகுந்த விளக்கத்தினை ஏற்பாட்டுக்குழுவினர் வழங்கினர்.

அத்துடன், பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழுவினர், எதிர்வரும் 24 ஆம் திகதி இராணுவத்தினர் எவரும் வவுனியா நகர் வீதிகளில் நடமாடக் கூடாதெனவும், வவுனியா நகரசபை மண்டபத்தில் பொலிஸாரை ஆயுதங்களுடன் அனுமதிக்க வேண்டாமெனவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்கு குழுவினரிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்த விடயங்கள் தொடர்பாக, நாளை திங்கட்கிழமை படை அதிகாரிகளுடன் - பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் சந்திப்பொன்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடத்த ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக, கண்காணிப்புக் குழுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### கண்டியில் மறியற்போராட்டம்!

(கொழும்பு)

பொருட்கள் மீதான விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சம்பளங்களை அதிகரிக்கக்கோரியும், நேற்றுமுன்தினம் கண்டியில் மறியற்போராட்டம் இடம்பெற்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மறியற்போராட்டத்தில், நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தை, நாடாளவிய ரீதியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துவருவதாக, பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.



கொழும்பு வந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஷாங் வெமிங்கை பிரதமர் ரணில் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# தவறான தகவல்களை வழங்கியே புலித்தேவன் கொழும்பு சென்றாராம்!

## வன்னி இராணுவக் கட்டளை அதிகாரி கூறுகிறார்

(வவுனியா)

தவறான தகவல்களைப் பயன்படுத்தியே, ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், கொழும்புக்குச் சென்று திரும்பியுள்ளார் என, குற்றஞ்சாட்டியுள்ளார் வன்னி மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி.

ஓமந்தையூடாக விடுதலைப் புலி உறுப்பினர், பயணம் செய்யும்போது- இராணுவத்தினரிடம் தகவல்களை வழங்கிவிட்டுச் செல்வதே நடைமுறையாகவுள்ளது.

ஆனால், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தவறான ஆவணங்களைப் பயன்படுத்தி, கடந்த புதன்கிழமை கொழும்பு சென்று வன்னி திரும்பியுள்ளார்.

புலித்தேவன் கொழும்புக்கு ஏன் சென்றார், எந்த நோக்கத்திற்காகச் சென்றார் என்ற விபரங்கள் தமக்குத் தரப்படவில்லை என்று, வன்னி மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி தெரிவித்தார்.

### திருமலை வளாக மாணவர்கள் மறியற்போராட்டம்!

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை மாவட்ட வளாக மாணவர்கள் நேற்றுமுன்தினம் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

தமக்குரிய வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் தமது வளாகத்திற்குரிய மாணவர்களின் தொகையை குறைத்தமைக்கு எதிப்பு தெரிவித்தும் மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களைச் சேர்க்கும்போது மாணவர்களுக்குரிய வசதிகள் இல்லாத காரணத்தால் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் மாற்றம் பெறுகிறார்கள் என்றும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேர்தல் முறையை மாற்றும்

# தெரிவுக்குழுவின் கூட்டத்தில் தேர்தல் ஆணையாளரும்!

தேர்தல் முறையை மாற்றுவது தொடர்பான தெரிவுக்குழுக் கூட்டத்தில், முதன்முறையாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கலந்துகொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தத் தெரிவுக்குழுக் கூட்டத்தில், சமூகமளித்திருந்த தேர்தல் ஆணையாளர் - வாக்காளர் யாப்புமுறை, அடையாள அட்டைகளைத் தேர்தல் காலங்களில் பாவித்தல் தொடர்பான புதிய நடைமுறைகளை விளக்கியுள்ளார்.

மீண்டும் தெரிவுக்குழுக்கூட்டம் 23 ஆம் திகதி கூடவுள்ளது. இந்தத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் எதிர்காலத்தில் தேர்தல்முறை தொடர்பாக ஆராயப்படவுள்ளது என, தேர்தல் தெரிவுக்குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்திலும் தேர்தல் ஆணையாளர் சமூகமளித்து, புதிய தேர்தல் நடைமுறை தொடர்பாக விளக்கமளிப்பார் எனவும் கூறப்படுகிறது.

# கொழும்பு பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே மோதல் !

## இரண்டு மாணவர்கள் காயம்

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் இரு மாணவர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஜெயவர்த்தபுர பல்கலைக்கழத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாகாபொல கொடுப்பனவு, கடந்த சில மாதங்களாக வழங்கப்படவில்லை.

மேற்படி கொடுப்பனவை வழங்குமாறுகோரி, மாணவர்கள் குழுக்கள் குழுக்களாக இணைந்து பல்கலைக்கழக நிர்வாகத்திடம் மகஜர் ஒன்றை கையளிப்பதற்காக கையெழுத்து சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளை - பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு ஆதரவான சில மாணவர்கள் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து, இரு குழக்களிடையேயும் கைகலப்பு ஏற்பட்டது. இதனால், இரு மாணவர்கள் காயமடைந்தனர்.

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பினால், மாணவர் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியதாகத தெரிவிக்கப்படுகிறது.

### பெற்றோரிடம் சிறுவன் ஒப்படைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைவதற்காகச் சென்றிருந்த 13 வயதுச் சிறுவன் புலிகளால், பெற்றோரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டான்.

களுவாஞ்சிக்குடி அரசியற்துறை அலுவலகத்தில் வைத்து, பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் கார்த்திக், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சீதா ஆகியோர் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு அச்சிறுவனை யுனிசெப் பிரதிநிதி கிறிஸ் ரவோ எரிவா முன்னிலையில் பெற்றோரிடம் ஒப்படைத்தார்கள்.

# உயர்தரப் பரீட்சை சிறப்புச்சித்தி பெற்ற 40 மாணவர்களுக்கு தங்கப்பதக்கம்!

(கொழும்பு)

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற 40 மாணவர்கள், கல்வி அமைச்சினால் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கலை,விஞ்ஞான வர்த்தக பாட மாணவர்களுக்கு, இவ்வாறு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

(ச,ய)

## பருத்தித்துறை லூர்துமாதா தேவாலய

# இடம்பெயர்ந்தோரின் முகாமை இடமாற்றும் முயற்சிக்கு எதிர்ப்பு!

(வடமராட்சி)

பருத்தித்துறை லூர்துமாதா தேவாலய அகதிமுகாமில் வசித்து வரும் இடம்பெயர்ந்த மக்களை, அருகிலுள்ள புனிதநகர் பகுதியில் குடியமர்த்த அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு, கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

1999 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிகளில் - வடமராட்சி கிழக்கின் நாகர்கோயில் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையை யடுத்து, அங்கிருந்து இடம்பெயர்ந்த 48 குடும்பங்கள் லூர்துமாதா தேவா லயப் பகுதிகளிலுள்ள தனியார் காணிகளில் குடியமர்த்தப்பட்டுள் ளன.

தற்போது குறித்த காணியிலி ருந்து குடியிருப்பவர்களை வெளி யேறுமாறு, காணி உரிமையாளர் கோரி வருகின்றார். இதனால் மேற் படி குடும்பங்களை, வல்லிபுரம் பகு தியை அணடிய புனிதநகர் எனும் காணிப்பகுதியில் குடியேற்ற, பருத் தித்துறை பிரதேச செயலகம் நடவ டிக்கை எடுத்திருந்தது.

ஆனால், இப்பகுதியில் இராணு வத்தினரால் - ஏராளமான வெடி பொருள்கள் புதைக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படுகிறது. இதுவரை அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக் கப்படவில்லை. இந்த நிலையில் தம்மை அப்பகுதியில் குடியேற்ற அதிகாரிகள் நிர்ப்பந்திப்பதாக அப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், கடற்தொழிலை நம் பிய தம் குடும்பங்கள், இப்பகுதியில் குடியேற்றப்பட்டால், தொழில் வாய்ப்பை இழக்கவேண்டிவரும் எனவும், அவர்கள் தெரிவிக்கின்றார் கள். குடிதண்ணீர் வசதிகள் உட்பட அடிப்படை வசதிகள் ஏதுமற்ற பிர தேசமாகவே, இப்பகுதி உள்ளதாக வும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மக்களைப் பல வந்தமாகக் குடியேற்ற அதிகாரிகள் முயற்சி எடுத்து வருவதாகத் தெரி விக்கப்படுகிறது. இக்காணியில் குடி யேறாவிட்டால், இடம்பெயர்ந்தோருக் கான உலர் உணவு நிவாரணத்தை இடைநிறுத்தப் போவதாக, அச்சுறுத்திய தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் - தம்மை தமது சொந்த இடங்களில் குடியமர அனு மதிககுமாறும், இல்லாவிடின் பொருத் தமான பிரதேசத்தில், அரசு குடியிருப் புகளை அமைத்துத்தர வேண்டு மெனவும் இம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக - உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி, மனித உரிமைகள் ஆணைக்குழு வின் யாழ்.அலுவலகத்தில் சம்பந்தப் பட்ட மக்களினால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்மக்களை நாகர் கோயிலை அண்டிய கொட்டோடை கரையோரப் பகுதிகளில் குடிய மர்த்த யாழ்.அரச அதிபர் மேற் கொண்ட முயற்சிகள், படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலய அறி வித்தலால் சாத்தியப்படாமையும், இங்கு குறிப்பிடத்தக்கது. (202)

## உலக சுகாதார நிறுவனத்தினால் முதலாவது நடமாடும் ஆய்வுகூடம்

### கொழும்பில் ஆரம்பம்

கொழும்பில் உலக சுகாதார நிறுவனம் - முதலாவது நடமாடும் ஆய்வுகூடம் ஒன்றை, அண்மையில் ஆரம்பித்து வைத்துள்ளது. இந்தத் திட்டம் முதன்முதலாக திருகோண மலை மாவட்டத்தில் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

யுத்தத்தால், பாதிக்கப்பட்ட வட-கிழக்குப் பிரதேசங்களுக்கு ஒழுங்கான முறையில் வைத்திய சேவையை நடத்துவதே இதன் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தத் திட்டத்தை வைத்திய அதிகாரிகளும், பொதுமக்களும் வர வேற்றுள்ளனர். இதன்மூலம் கர்ப் பிணித் தாய்மார்கள் நன்மையடை கின்றனர். இந்த நடமாடும் சேவை யில் பல்வேறு மருத்துவப் பரிசோத னைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பரிசோதனைகள் யாவும் இலவச மாக வழங்கப்படுகின்றன. (17)

## வலயக்கல்வி அலுவலகங்களில்

# கடமையாற்றும் சேவைக்கால ஆசிரியர்களை ஆலோசகர்களாக உள்வாங்க நடவடிக்கை!

வலயக் கல்வி அலுவலகங்க ளில், சேவைக்கால ஆசிரியர் ஆலோச கர்களாகக் கடமையாற்றுபவர்கள்- அடுத்தாண்டு முதல் இலங்கை ஆசிரி யர் கல்வியியலாளர் சேவைக்குள் உள்ளீர்க்கப்படுவார்கள் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இதற்கான பூர்வாங்க நடவடிக் கைகள் நாடளாவியரீதியில் எடுக் கப்பட்டு வருகின்றன.

வலயக் கல்விப் பணிமனையில், ஒவ்வொரு ஆசிரிய ஆலோசகருக் கும், தனித்தனியான இரகசிய வேலை முன்னேற்றக் கோவைக ளைப் பேணுமாறு, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின் றது. எதிர்வரும் டிசம்பர் மாதமள வில் தனித்தனிக் கோவைகள் மாகா ணக் கல்வி அமைச்சிற்கு அனுப் பப்படவுள்ளன.

ஆசிரிய ஆலோசகர்களின் சேவை யில் திருப்திகாணுமிடத்து மட்டுமே, அவர்கள் மேற்படி கல்வியியலாளர் சேவைக்கு உள்வாங்கப்படும் வாய்ப்பு உண்டு என்றும், இதற்கெனப் புள்ளித் திட்டமும் ஏற்படுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (122)

# யாழ்.வைத்தியசாலையிலிருந்து நோயாளர்கள் கொழும்பிற்கு!

சுகாதார ஊழியர் தொழிற்சங்கம- தொடர் வேலைநிறுத்தம் மேற்கொண் டுள்ள வேளையில், நேற்றுமுன் தினம் யாழ். போதனா வைத்தியசா லையிலிருந்து நோயாளர்களுடன் பஸ் ஒன்று கொழும்புக்குச் சென் றுள்ளது.

பஸ்ஸில் செல்லவேண்டிய சுகா தார ஊழியருக்குப் பதிலாக, வேறு பிரிவைச் சேர்ந்தவரே உதவியாகச் சென்றுள்ளார். வைத்தியசாலை நிர் வாகத்தினர், திட்டமிட்டு அவசரமில் லாத நோயாளர்களை, கொழும்புக்கு அனுப்பியுள்ளதாக, வேலைநிறுத்தத் தில் ஈடுபட்டுள்ள சுகாதார ஊழியர்கள விசனம் தெரிவித்துள்ளனர். (111)

# சம்மேளன அங்கத்தவர்களால் வாய்க்கால்கள் புனரமைப்பு!

நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருந்த, மட்டுவில் பிரதேசத்தில் உள்ள வாய்க்கால்கள் யாவும் திருத் தப்பட்டுள்ளன.

மழைகாலங்களில் வயல் நிலங் களிலும், குடியிருப்பு நிலங்களிலும் மேலதிகமாகத் தேங்கும் நீரை அப் புறப்படுத்துவதற்கு பயன்பட்டு வந்த வாய்க்கால்களில் - புற்கள், பற்றை கள் வளர்ந்து நீர் வளிந்தோட முடி யாத நிலை காணப்பட்டது.

மட்டுவில் பகுதி விவசாய சம் மேளன அங்கத்தவர்களினால், கடந்த வாரம் இந்த வாய்க்கால்கள் புனர மைப்புச் செய்யப்பட்டுள்ளன. சிரம தான அடிப்படையில் மேற்கொள்ளப் பட்ட இத்திருத்த வேலைகளினால், மேலதிகமாக நீர்தேங்கும் அபாயம் விலக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (24)





போலியோ சொட்டு மருந்தை நேற்று யாழ். நகரில் தாதி ஒருவர் குழந்தை ஒன்றுக்கு வழங்குவதையும், போலியோ சொட்டு மருந்தைப் பெறுவதற்கா கத் தமது பிள்ளைகளோடு நீண்ட வரிசையில் காத்து நிற்கும் பெற்றோர்களை யும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சர்வேஸ்)

### நீதிமன்றங்களில் குடும்ப ஆலோசகர்கள் நியமனம்

யாழ்.மாவட்ட நீதிமன்றங்களில் குடும்ப ஆலோசகர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் சமூகக் குற்றச்செயல்களை விசாரணைசெய்து, விரைவாகத் தீர்ப்பு வழங்கும் நோக்கிலே, இந்த மாவட்டத்தின் நீதிமன்றங்களில் விவாகரத்து, தாபரிப்பு வழக்கு களை விசாரிப்பதற்கு என, குடும்ப ஆலோசகர்களை நியமிப்பதற்கு, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அனுமதி வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அனுமதி கொழும்பில் நீதி யரசர்களுடன் நடத்திய சந்திப்பின் பின்னரே வழங்கப்பட்டது. (122)

### முழங்காவிலில் நடமாடும் சேவை

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளை - முழங்காவில் பிரதேச மக் களின் நன்மைகருதி, வாரத்தில் ஒருநாள் நடமாடும் வங்கிச் சேவை யினை நடத்திவருகின்றனர்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் காலை 10 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை, முழங்காவில் கமநல சேவை நிலையத்தில் வைத்து மேற் படி நடமாடும் சேவை நடைபெற்று வருவதாக, கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் ச.திருச்செல் வம் தெரிவித்துள்ளார். (122)

### நிதி ஒதுக்கீடு

வேலணை பிரதேச செயலகம், காரைநகர் உதவி அரச அதிபர் பணி மனை ஆகியவற்றின் நிர்வாக எல் லைக்குட்பட்ட பகுதி மக்களுக்கு, குடிநீர் வழங்குவதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தால் 9 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து மேற்படி பிர தேச மக்களுக்கு, இந்த ஆண்டுக் கான குடிநீர் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (24)

### சீரடிபாபாவின் சற்சரிதம் வாசிப்பு

பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில், சீரடி பாபா சற்சரிதம் வாசிப்பு, இன்று காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது. இறுதிநா ளான 27 ஆம் திகதி பாபாவின் ஜெயந்திதின நிகழ்வு இடம்பெற்று, நாராயண சேவையுடன் நிகழ்வுகள் நிறைவுபெறும். (111)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்

பெயர் : சு.சுலக்ஷன் (சுரேன்)
முகவரி : பெரியவிளான், இளவாலை.



பத்தாவது அகவையில்



பெயர் : பா.லவன்சன்
முகவரி : பிரம்படி லேன், கொக்குவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------
முகவரி :----------------------------
பிறந்த ஆண்டு:----------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# தெரிவு அவசியம்

ஒரு கிரிக்கெட் வீரர் தன் அதிசிறந்த திறமையுடன் எவ்வளவு காலம் சர்வதேச அரங்கில் ஜொலிக்கமுடியும் என்பது ஒரு வினா. இதற்குப் பதிலளிக்கும் கிரிக்கெட் ஆய்வாளர்கள் கருத்துக் கூறும்போது - ஒரு வீரன் எந்தளவிற்கு, எப்போது, விளையாடவேண்டும் என்று தீர்மானிக்கிறானோ, அதைப்பொறுத்தே அவனது விளையாடும் காலமும் என்கிறார்கள். இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், வீரர்கள் நிறைய ஆட்டங்களில் கலந்துகொள்ள விரும்புகிறார்கள். அதே நேரம் ஓய்ந்து போகாமல், களைப்படைந்து விடாமலும் இருக்க நினைக்கிறார்கள். இது சாத்தியமற்றது என்கிறார் ரிக்கி பொன்ரிங்.



அலன்டொனால்ட் என்றும் இளமை

உண்மையில் ஓய்வற்ற விளையாட்டு கூடுதலாக வேகப் பந்துவீச்சாளர்களையே பாதிக்கின்றது என்பது கண்கூடு. இதற்கு உதாரணமாக - அவுஸ்திரேலிய ஜேஸன் ஜிலெஸ்பி, இங்கிலாந்தின் டரன்கோ, நியூசிலாந்தின் கிறிஸ் கெய்ன்ஸ் ஆகியோரை உதாரணம் காட்டுகிறார்கள். இவர்கள் எவ்வளவு காலம் நீடிப்பார்கள் என்பது ஒருபுறம் இருக்க, இடையிடையே காயங்கள், உபாதைகளால் எடுத்த ஓய்வே அதிகம். அதற்குக் காரணம் - ஓய்வுஒழிவற்ற விளையாட்டே ஆகும். ஆனால், இதேவேளை தற்போது ஓய்வு பெற்றுவிட்ட தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் அலன்டொனால்ட் விளையாடினார். அதன் மூலம் தனது உடற்தகைமையைப் பாதுகாத்துக்கொண்டார்.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை பொன்ரிங், ஸ்ரீவ்வோ, மக்ரா; வோன் போன்றோரே ஐந்து வருடங்களாகத் தங்கள் உடற்தகுதியைப் பேணி, ஆட்டத்தில் தொடர்கிறார்கள். பலர் அரங்கில் இருந்து காணாமல் போய்விட்டார்கள்.

ஒரு விமர்சகர் சச்சின் பற்றிக் கூறுகையில் - மிகக் குறைந்த வயதான - பதினாறு வயதில், சர்வதேச கிரிக்கெட் உலகிற்கு வந்த சச்சின், மிகக்கூடிய வயதில் ஓய்வு பொறுவார் என்று எதிர்பார்க்கமுடியாது என்கிறார். காரணம் - ஓய்வற்ற விளையாட்டு. இதனால் காயங்கள், சத்திரசிகிச்சைகள். கடந்த நான்கு வருடங்களில் பல்வேறு உபாதைகளுக்குள்ளான இவர், இரண்டு சத்திரசிகிச்சைகளுக்கும் உள்ளாகியுள்ளார். இப்படியான நிலைமைகளுக்குக் காரணம்- சர்வதேச கிரிக்கெட் கால அட்டவணையும்தான் என்பதை மறுக்கமுடியாது. இதேவேளை- அண்மையில் ஓய்வுபெற்ற இங்கிலாந்து வீரர் அலெக்ஸ் ரூவட் - 133 டெஸ்டுகளில் ஆடியவர். நாற்பது வயதில்தான் ஓய்வு பெற்றார். இவரைப்போல எல்லோரையும் எதிர்பார்க்க முடியாது.

இதேவேளை, விளையாட்டின் மூலம் கிடைக்கும் பெருந்தொகைப்பணமும், ஓய்வு ஓச்சலற்ற விளையாட்டுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இதில் என்ன சந்தேகம். கிரிக்கெட் - பணத்துக்கும், விளம்பரங்களுக்கும் அடிமையாகப்போயிருக்கிற காலம் இது. எனவே, கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்படும் நிலையில், சில இழப்புக்களையும் எதிர்கொண்டே ஆகவேண்டும்.

-வெரோனிக்கா

# இளைய நட்சத்திரம்

கிரிக்கெட் வானில் உதயமாகும் புதிய நட்சத்திரங்கள் பற்றி எழுதுவதில் ஒரு உற்சாகம். சர்வதேச கிரிக்கெட் உலகிற்குப் பாகிஸ்தானிலிருந்து ஒரு உதயம். அவர் பெஷாவர் நகரத்துக்கப்பால் இருக்கும் ஒரு குக்கிராமத்திலிருந்து வந்திருக்கிறார். அவர்தான் உமர்குல். உமர்குல், தான் நேசிக்கும் முதல் வீரன்- கிளென் மக்ரா என்கிறார். "பாகிஸ்தான் பல அற்புதமான பந்து வீச்சாளர்களைத் தந்திருக்கிறது. அவர்களது பாதையைப் பின்பற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், கிளென் மக்ராவை ஆதர்சமாகக் கொண்டு, அவரின் பந்துவீச்சுப் பாணியையே பின்பற்றுகிறேன்" என்கிறார், 19 வயது மட்டுமான உமர்குல். வசீம் அக்ரம், வக்கார் யூனுஸ் இருவரும் ஓரங்கட்டப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக ஒன்பது முதற்தர ஆட்டங்கள் மட்டும்



உமர் குல் 'இன்னொரு மக்ரா'

கண்ட உமர்குல் வரும்போது, பலிபீடத்துக்குத்தான் தன்னைப் பாகிஸ்தானிய கிரிக்கெட் சபை கொண்டு செல்கிறது என்றுதான் உமர்குல் எண்ணியிருப்பார். தற்போது உமர்குல் பத்து ஒருநாள் போட்டிகளில் எடுத்திருக்கும் பதினைந்து விக்கெட்டுகளும், மூன்று டெஸ்ட் போட்டிகளில் பெற்றிருக்கும் பதினைந்து விக்கெட்டுக்களும் சாதனை என்பதைவிட, தனது ஒன்பது முதற்தர ஆட்டங்களில் பெற்ற ஐம்பத்தொரு விக்கெட்டுகள்தான் காத்திரமானவை. ஏனெனில், அதுவே சர்வதேச வாசல்களை அவருக்காகத் திறந்துவிட்டது.

மக்ரா மென்மையான, தொடர்ச்சி தளம்பாத பந்துவீச்சுப் பாணி கொண்டவர். அவரின் பாணி, எனக்கு உதவுகிறது. அதேபோல, பயிற்றுநர் ஜாவிட் மியன்டாட் - பந்துவீச்சின் துல்லியத்தையும், வேகத்தையும் பற்றி நிறையக் கற்றுத்தருகிறார் என்கிறார். மறுவளமாக மியன்டாட் குறிப்பிடும்போது, மிகக் கடுமையான, தளராத பயிற்சிதான், உமர்குல்லின் வெற்றிக்குக் காரணம். உமர்குல் அடுத்து எதிர்பார்ப்பது, தென்னாபிரிக்க அணியை. உமர்குல் கூறுவதுபோலவே, மக்ராவைப்போல தென்னாபிரிக்க வீரர்களுக்குப் பந்து வீசுவராயின், அதில் வெற்றியும் பெறுவாராயின், மிகப் பிரமாதான சாதனையாக அது அமையும். ஏனென்று விளக்கவேண்டிய அவசியமில்லை. தென்னாபிரிக்கப் படையணி அப்படிப்பட்டது. இருந்தாலும்கூட, இப்பொழுதே உமர்குல் - பாகிஸ்தான் அணியில் நிரந்தர வேகப்பந்து வீச்சாளராகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டார் என்றே, விமர்சகர்கள் வலுவாக நம்புகிறார்கள்.

மக்டலின்.

# விளையாட்டு அரங்கம்

## மீண்டும் கர்ச்சிக்கும் இன்சமாம்

பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற மூன்று டெஸ்ட் போட்டிகளில், மூன்றிலுமே பங்களாதேஷ தோல்வி கண்டாலும், அந்தத் தொடரிலிருந்த விறுவிறுப்பு தற்போது நடைபெற்று வரும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் இல்லையென்றே கூறவேண்டும். இதுவரை நடந்து முடிந்த மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும், பாகிஸ்தான் இலகுவாகவே வெற்றி கண்டது என்று கூறலாம். திறமையும், அதிர்ஷ்டமும் ஒன்று சேர வேண்டுமென்பார்கள். துரதிர்ஷ்டவசமாகப் பாகிஸ்தான் அணித்தலைவர் ரஷீட் லத்தீப் - ஐந்து ஒருநாள் போட்டிகள் விளையாடுவதிலிருந்து தடைவிதிக்கப்பட்ட அந்த இடத்தை நிரப்ப வேண்டியநிலை, இன்சமாமுக்கு ஏற்பட்டது. அதனை அவர் மிக நன்றாகவே செயற்படுத்துவது தெளிவாகவே தெரிகின்றது. அணித்தலைவராயும், அதேவேளை துடுப்பாட்ட வீரராகவும் மெச்சத்தக்க விதத்திலேயே இன்சமாம் தன் பங்கினைச் செய்து வருகின்றார்.



இன்சமாம் உல்ஹக் "சிலிர்ப்பு"

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளைப் பொறுத்தவரை, பாகிஸ்தான் - நடந்துமுடிந்த மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியுடன், தனது கிரிக்கெட் வரலாற்றில் 564 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடி முடித்திருக்கிறது. முல்தான் மற்றும் பைசாலாபாத் ஆகிய இடங்களில் நடந்த ஆட்டங்களிலும் வெற்றிகண்ட பாகிஸ்தான், லாகூரில் நடைபெற்ற ஆட்டத்தில் பெற்ற வெற்றியானது, அதனது 300 ஆவது ஒருநாள் வெற்றியாகும். டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளில் - வேறெந்த நாடும் இந்தச் சாதனையைப் புரியவில்லை. பாகிஸ்தானுக்கு முன்னதாக அவுஸ்திரேலியா மட்டுமே முன்னூறு ஒருநாள் ஆட்டங்களுக்கு மேல் வெற்றி கண்ட நாடு என்ற பெருமையைப் பெற்றுக்கொள்கிறது.

மூன்றாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் முதலில் பெற்ற ஓட்டங்கள் - ஒன்பது விக்கெட் இழப்பிற்கு, 257 ஓட்டங்கள். இதில் சிறப்பான யூசுப் யொகானா 65 ஓட்டங்கள். மற்றும் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் - ஆட்டமிழக்காது பெற்ற 64 ஓட்டங்கள் குறிப்பிடத்தக்கன.

பங்களாதேஷ் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தவேளையில், ஏற்பட்ட மின்தடை (மைதான மின் ஏற்பாட்டில் ஏற்பட்ட குழப்பம்) ஐம்பத்தைந்து நிமிடநேர விளையாட்டை விழுங்க, டக்வேர்த் லூயிஸ் முறையின் கீழ், 44 ஓவர்களில் 244 ஓட்டங்கள் பெற்றால், வெற்றி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிலையில், பாகிஸ்தான் இளம் வேகப் பந்துவீச்சாளர் உமர்குல் அற்புதமாகப் பந்துவீசி, முதல் மூன்று விக்கெட்டுகளையும் சாய்த்துவிட, பின்னர் பங்களாதேஷ் பெரும் போராட்டத்துக்குள் வீழ்ந்தது. இறுதியில், நாற்பத்து நான்கு ஓவர்களில், ஒன்பது விக்கெட் இழப்பிற்கு, 201 ஓட்டங்கள் மட்டுமே பெறமுடிந்தது. உமர்குல் பதினேழு ஓட்டங்கள் மட்டும் கொடுத்து, ஐந்து விக்கெட்டுகளைச் சாய்த்தார். திறமைசாலி இன்சமாம், அவருக்கு அதிர்ஷ்டமும் கைகொடுக்கிறது.

நிர்மலன்.

# நல்ல சிந்தனை



முட்டோலா 'ஏழைகளின் தோழி'

சர்வசேதரீதியில் புகழ்பெறும் எந்த விளையாட்டு வீரர்களாக இருந்தாலும், அவர்கள் பெறும் பணப்பரிசு மில்லியன் கணக்கில் தான் அமையும். இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைப் பெறுபவர்கள், சில நல்ல காரியங்கள் செய்வது, பத்திரிகைச் செய்திகள் மூலம் வெளியுலகுக்குத் தெரியவருகின்றன. இந்த முறை பாரிஸ் தடகளச் சாம்பியன்ஷிப் போட்டிகளில், 800 மீற்றர் மகளிர் நிகழ்வில் முதலிடம் பெற்றவர் மொசாம்பிக் நாட்டைச் சேர்ந்த மரியா முட்டோலா. இவர் மூன்றாவதுமுறை உலகச் சாம்பியன் பதக்கம் வென்றவர் மட்டுமல்ல, ஒலிம்பிக் பதக்கத்துக்கும் சொந்தக்காரியாவார். இவர்தான் மில்லியன் கணக்கான போனஸ் பணத்தில், அரைவாசித் தொகைப் பணத்தையாவது தனது வறிய நாட்டின் இளம் தடகள வீரர்களின் மேம்பாடு நோக்கிச் செலவிடத் தயாராக உள்ளதாகத் தெரிகிறது.

மேலும், கணிசமான தொகையை - நலன்புரி நிறுவனங்களுக்கும் வழங்க உத்தேசித்துள்ளார். தலா வருமானம் 200 டொலர் மட்டும் கொண்ட வறிய நாட்டினைச் சேர்ந்த முட்டோலா, பெறும் பெருந்தொகை பணம் அவருக்குச் சங்கடமாகத்தானிருக்கிறது. முட்டோலா கருத்துக் கூறும்போது, நவீன வசதி கொண்ட தடகளம் ஒன்றை அமைப்பதில் அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து, தனது பங்களிப்பையும் செய்திருப்பதாகவும், மொசாம்பிக் நாட்டின் வசதி குறைந்த சிறந்த 15 வயதுத் தடகள வீரனுக்கு, அமெரிக்காவில் கல்வி வசதி ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் கூறுகிறார். "மரியா முட்டோலா நிதியம்" என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதன்மூலம் நிதி நிர்வாகத்தினைக் கவனமாக மேற்கொள்ளப் போவதாகக் கூறும் முட்டோலா, இது தளர்வின்றித் தொடர்ச்சியாக நடைபெறுவதன் அவசியம் பற்றியும் கவனம் செலுத்துகின்றார். சர்வதேச நிகழ்வுகளுக்குச் செல்லும்போது - இரண்டு, மூன்று வீரர்கள் மட்டும் செல்வது சிறிது தலைகுனிவாகவுள்ளதென்றும், குறைந்தது பத்து, பதினைந்து பேராவது செல்லவேண்டும் என்றும், அதற்கான திறமை மொசாம்பிக்கில் காணப்படுகிறது என்றும், அதனால் திறமையுள்ளவர்களைக் கண்டுபிடித்து, அவர்களை வளர்த்தெடுப்பதுதான் இலட்சியம் என்கிறார்.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# கல்தி கிஸ்கி (யார்தவறு)

ஒரு கோடியே பதின்மூன்று இலட்சம் ரூபா என்றொரு பெருந்தொகைப் பணத்தில், நன்னீரின்றி அவதிப்படும் எத்தனை கிராமங்களுக்குக் குடிநீர் வசதியைச் செய்யலாம். தெருவிளக்குகளில் தம் பாடங்களைப் படிக்கும் எத்தனை ஆயிரம் குழந்தைகளின் குடிசைகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கலாம். எத்தனை இளம் விதவைகளுக்கு எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தொழில் ஒன்றுக்கு உதவலாம். வசதி வாய்ப்புகள் மிகக்குறைந்த நிலையில், தம் சந்தர்ப்பத்தை இழந்து நிற்கும் எத்தனை வறிய, ஆனால் திறமை மிகுந்த தடகள வீரர்களுக்குத் தம் திறமையை உயர்த்திக்கொள்ள வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம். வறுமைக்கோடென்பதும் ஏதோவொரு விளையாட்டில் வரையப்பட்டிருக்கும் கோடு என்பதுபோல, சாதாரணமாகிப் போய்விட்ட கோடிக்கணக்கான மக்களைக் கொண்டிருக்கும் இந்திய நாட்டில் - இந்தத் தொகையைக்கொண்டு, எப்படி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தலாம் என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போபவர் - பிரபல்யமான சஞ்சிகையொன்றில் கனதியான விளையாட்டுச் செய்திகளைத் தருபவர்.

இப்படியான சிந்தனையோட்டம் ஒன்று ஏற்படக் காரணம், பியட் கார் கொம்பனி- சச்சின் டெண்டுல்கருக்கு அன்பளிப்புச் செய்த இந்திய ரூபாயில் 75 இலட்சம் ரூபா பெறுமதியான பெராரி - 360 - மொடேனோ கார் தொடர்பில்த்தான். கார் இலவசமாக வழங்கப்பட்டாலும், இந்திய சட்டதிட்டத்திற்கமைய, ஒரு கோடியே பதின்மூன்று இலட்சம் ரூபா வரியாகச் செலுத்தவேண்டும். ஆனால், அதனை இந்திய அரசு வரி நீக்கம் செய்து, டெண்டுல்கருக்கு ஒரு உலகறிந்த சிறந்த வீரன் என்ற வகையில் சலுகை செய்துவிட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இங்கு யாரும் சச்சினைக் குற்றஞ்சாட்டவில்லை என்பதென்னவோ உண்மைதான்.

ஆனால், ஒரு நேரக்கஞ்சிக்கு வழிதெரியாமல் தவிக்கும் வறுமை நிறைந்த நாடுகளில், பல கோடி மக்கள் பரிதவிக்க, ஒரு தனிமனிதன் - அவரது ஆடம்பரம் - அவருக்கு அரசு செய்யும் மரியாதை - என்ற வகையில், இந்தியர்கள் மட்டுமல்ல, வறுமை தலை விரித்தாடும் அத்தனை நாடுகளிலும் ஒரு அருவருப்பு உணர்ச்சி பரவியிருப்பதை மறுக்கமுடியாது.

சச்சின் பற்றிய பெருமைகளையெல்லாம் மறுக்காமல், மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் கட்டுரையாசிரியர் - கேட்கும் கேள்வி இதுதான். எத்தனையோவிதப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் கொண்ட இந்தியாவில்- விளையாட்டுத்துறையின் அதிமுதன்மைப் பணக்காரர் ஒருவருக்கு ஏன் அரசாங்கம் இந்தப் பாரியதொகை வரிப் பணத்தை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதே அந்தக் கேள்வி.

இந்தவேளையில், ஒரு நாட்டின் சட்டம் என்பது - எந்த நிலையிலும் சமமாகயிருக்க வேண்டும் என்பதில், எதுவித சந்தேகமும் இருக்கமுடியாது. அந்தத் துலாக்கோல் - சச்சின் விடயத்தில் சரிவதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ரென்னிஸ் உலகில் கொடிகட்டிப் பறந்த ஸ்ரெபி கிராபுக்கும், பொறிஸ் பெக்கருக்கும் அறிமுகம் அவசியமில்லை. ஸ்ரெபி கிராபின் வருமானம் தொடர்பான கணக்கு வழக்குகளைப் பார்த்து வந்தவர் அவரது தந்தை. அந்தக் கணக்கு வழக்குகளில் செய்த தில்லுமுல்லுகளால், ஜேர்மானிய சட்டப்படி சிறைக்கு அனுப்பப்பட்டவர் ஸ்ரெபியின் தந்தை. இதேபோல, ஜேர்மனியின் வரிச்சட்டங்களைச் சாடையாக மீறியவர் பொரிஸ் பெக்கர் என்பதற்காக, கடுமையாக எச்சரிக்கப்பட்டு, பாரிய தொகையைத் தண்டப்பணமாகச் செலுத்தியவர்.

இவர்கள் இருவராலும், ஜேர்மனிக்குப் பெருமைதான். ஆனால், சட்டத்துக்குமுன் யாரும் பெரியவரல்ல என்று காட்டியது ஜேர்மனி. ஆனால், சச்சின் விடயத்தில் இந்தியா நடந்துகொண்ட முறை...?

விளையாட்டு வீரர்கள் என்ற வகையில் வேறுவிதமான உணர்வலைகள் எழும்புகின்றன. இந்தியாவில் கிரிக்கெட் தவிர்ந்த வேறு விளையாட்டுக்களில் சாதனை புரிபவர்கள்- இவர்கள் அளவிற்கு மதிக்கப்படுகிறார்களா? பொருளாதார வசதிகளைப் பெற்றுக்கொள்கிறார்களா? என்பதே அது. குறிப்பாக, தாழ்ந்து போயிருந்த இந்திய ஹொக்கி விளையாட்டை வியப்புற வைக்கும் அளவிற்கு உயர்த்தி வைத்திருப்பவர் அணித் தலைவர் தனராஜ்பிள்ளை. அதேபோல, இந்திய தடகள வரலாற்றில் சர்வதேச ரீதியில் முதன்முறையாக ஒரு பதக்கம் வென்றிருப்பர் அஞ்ஜு ஜோர்ஜ். இவர்களெல்லாம் சச்சின் கவனிக்கப்படும் அளவிற்குக் கவனிக்கப்படுவார்களா? இதுமட்டுமன்றி, இன்னும் எவ்வளவோ பேர் கண்டுகொள்ளப்படாமலே போயிருக்கிறார்களே என்று பலரும் அங்கலாய்க்கிறார்கள்.



சச்சின் டெண்டுல்கர் (வீண்சர்ச்சை)

இது தொடர்பில் அபிப்பிராயம் தெரிவித்தவர்கள் பலர். அதில் கபில் தேவின் கருத்து கறாராக வெளிப்பட்டிருக்கிறது. அவர் கூறுகிறார்- ஒருவருக்காக, அரசு கொள்கையை மாற்றிக் கொள்ளக்கூடாது. அப்படியாயின், எல்லோர் விடயத்திலும் அதேபோன்று நடந்துகொள்ள வேண்டும். ஒரு பேச்சுக்கு, விஸ்வநாதன் ஆனந்துக்கு அல்லது தனராஜ்பிள்ளைக்கு அல்லது கங்கூலிக்கு அல்லது அமிதாப்பச்சனுக்கு யாராவது ஒரு விமானம் பரிசளிக்கக்கூடும். அதற்கு வரி அறவிடுவீர்களா இல்லையா என்று கேட்கிறார் அவர். நியாயம் தானே.

- ஜோசப் கிருஷ்ணா

# புதிய பார்வை




வசீம் அக்ரம் தவிர்க்கப்படமுடியாதவர்

வசீம் அக்ரம் பற்றிய செய்திகள் எப்போதும் சுவையாகவும், பிரயோசனமாகவும் இருப்பது வழக்கம். இப்போது வசீம் அக்ரம் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார். முப்பத்தேழு வயதான வசீம் அக்ரம், ஓய்வு பெற்றது ஒருபுறம் இருக்க, பாகிஸ்தான் அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை என்பது இன்னொரு செய்தி. அத்தோடு, அவர் தேசிய அணியினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தகுதியிலேயே இருக்கிறார் என்பதும் ஒரு உண்மை. ஆனால் வசீம் அக்ரம் இன்னொரு திசையில் சிந்திக்கிறார் போலத்தெரிகின்றது.

பாகிஸ்தானிலிருந்து கருத்துத் தெரிவித்த வசீம் அக்ரம் - தான் ஐக்கிய அமெரிக்க டெட்ரொயிட் நகரில் நடைபெறவுள்ள ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு போகும்போது என்னைப் போன்ற முதிர்ந்த அனுபவமுள்ள, வீரர்கள் ஐக்கிய அமெரிக்காவின் வளர்ச்சிக்கு நிறையச் செய்யமுடியும். ஏனெனில், ஐக்கிய அமெரிக்காவில் நிறையக் கிரிக்கெட் ஆர்வம் இருப்பதை நான் அறிவேன் என்கிறார். நான் கடந்த வருடம் ஐக்கிய அமெரிக்காவிற்குச் சென்றிருந்தேன். அப்பொழுது அவர்களது கிரிக்கெட் ஆர்வத்தை நன்கு புரிந்துகொண்டேன். மேலும் அந்த ஆர்வம் இன்னும் வளர்க்கப்படமுடியும் என்பதையும் உணர்ந்தேன் என்கிறார்.

ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கும் இலங்கை, இந்திய, பாகிஸ்தானிய வம்சாவழி மக்கள் - அங்கு பல கிரிக்கெட் கழகங்களை அமைத்து, விளையாடிவருகிறார்கள். மேலும், சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் ICC கிரிக்கெட் கிண்ணப் போட்டிகளில், இரண்டு வருடங்களுக்கு முன் ஐக்கிய அமெரிக்க நாட்டின் தேசிய அணியும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. இந்தவகையில் வசீம் அக்ரம் கூறும் கருத்தும், ஐக்கிய அமெரிக்க ஆர்வமும் ஒன்று சேர்ந்தால், அமெரிக்கக் கிரிக்கெட் மிகவேகமாக வளரும் சாத்தியம் உள்ளது. ஏன்னெனில், மேற்கு இந்தியத் தீவுகளின் அண்மையும் சாதகமான காரணிகளில் ஒன்றாக அமையும். அத்தோடு, அமெரிக்காவில் கொழிக்கும் செல்வம், எல்லாவற்றையும் மேவி வசதிகள், வாய்ப்புகள் பெருகி, நிதி வசதிகள் என்று ஒரு பலமான அததிவாரத்தைக் கொடுக்கும். சிலவேளைகளில் அமெரிக்க கிரிக்கெட் அணிகள் மற்றும தேசிய அணியின் சாதனைகள் பற்றி எழுதும் சந்தர்ப்பம் ஒரு சில வருடங்களில் கிடைக்கக்கூடும்.

மேலும் சாதனைவீரன் வசீம் அக்ரம் - 414 டெஸ்ட் விக்கெட்டுகளைச் சாய்த்தவர். ஒரு நாள் போட்டிகளில் சாதனையாக 356 போட்டிகளில் 502 இலக்குகளைச் சாய்த்தவர். இவர் அமெரிக்க கிரிக்கெட்டின் வளர்ச்சியில் தொடர்பு கொள்வது என்பது, அமெரிக்க கிரிக்கெட் செய்த அதிர்ஷ்டம்தான். இவரைத் தொடர்ந்து, இன்னும் பல பிரபலங்கள் அமெரிக்கா செல்லக்கூடும்.

சிறப்பாக 2007 மேற்கு இந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது, தமது நாட்டிலும் சில போட்டிகளை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று ஐக்கிய அமெரிக்கா கேட்டுள்ளது. மொத்தத்தில் இன்னுமொரு கிரிக்கெட் நாடொன்று வேகமாக வளரப்போகின்றது என்பது தெரிகிறது.

-சரண்யா

# நம்பினார் கெடுவதில்லை



"தேவை சமாதானப் புறாக்கள்"

இந்தியா - பாகிஸ்தான் என்னும் நாடுகள் பிரிந்துசென்று ஐந்து வருடங்களின் பின், எவ்வளவோ உஷ்ணமான பிரச்சினைகள் இருந்தபோதும், 1952 இல் பாகிஸ்தான் - இந்தியாவுக்குத் தமது முதல் டெஸ்ட் தொடருக்காகச் சென்றது. அங்கு நடைபெற்ற ஐந்து டெஸ்ட் போட்டிகளில் 2:1 என்ற தொடரில் இந்தியா வென்றது. இந்த முதன்மை பெற்ற முதல் தொடரில் விளையாடிய ஆறு வீரர்கள், இந்த உலகிலில்லை. இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பன்னிரண்டுபேர். இவர்கள் எல்லோரையும் கௌரவிக்கும் ஒரு வரவேற்புபசாரத்தில், மீண்டும் பாகிஸ்தான் - இந்திய கிரிக்கெட் ஆட்டங்கள் தொடங்கப்படவேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அருமையானதொரு கருத்தை முன்வைத்திருப்பவர் வேறுயாருமல்ல. பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஸ் முஷாரப்தான். நீண்டகால இடைவெளி துயரமானது. கடந்துபோனவை போனவையாக இருக்கட்டும். இருதரப்பு நன்மைக்காகவும், தென்னாசிய கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காகவும் இரு நாடுகளும் கிரிக்கெட் ஆட்டத்தைத் தொடரவேண்டும் என்கிறார். 1989 - 1990 தொடரின் பின்னர், இதுவரை எந்தவொரு இந்திய அணியும், பாகிஸ்தானுக்குச் செல்லவில்லை.

ஆனால், கடந்த சில வருடங்களாக உக்கிரமாகிப் போயிருந்த உறவுகள், தற்போது சீர்பெற்று வருகின்றன. கனிஷ்ட மற்றும் 'A' அணிகள் சந்திக்கவிருக்கும் இந்த வேளையில், பாகிஸ்தான் அணியின் குரல்தரவல்ல அதிகாரி ரமீஸ் ராஜாவும் இந்தியா சென்றிருக்கிறார். இந்தவேளையில், அரசியலை ஒருபுறம் வைத்துவிட்டுப் பார்த்தால், இன்று இந்த வேண்டுகோளை விடுத்திருப்பவர் பாகிஸ்தானில் முதன்மை மனிதர். இவரின் வேண்டுகோள் இந்திய அரச, ராஜதந்திர மட்டத்தில் ஒரு கிரிக்கெட் அலசலை ஏற்படுத்தவே செய்யும். எனவே, கிரிக்கெட் ரசிகர்கள், குறிப்பாய்த் தென்னாசியக் கிரிக்கெட் ரசிகர்கள் மீண்டும் ஒரு நம்பிக்கையை வளர்க்கிறார்கள் தம் மனதில். அது நிறைவேறுமா? இந்தியா தான் பதில் கூறவேண்டும்.

ரோஜா

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sport

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்

- திருக்குறள்

## நமது நோக்கு

### சந்திரிகா - ரணில் அதிகார மோதல்!

ஜனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையிலான அரசியல் ஆதிக்கவலுப் போட்டியின் தளத்திலான, கசப்புணர்வுடன் கூடிய பகைமை நிலையானது, அதன் படிமுறை வளர்ச்சியின் உச்சக்கட்டத்தினை இந்த வாரத்தில் எட்டியுள்ளது.

இந்த பகைநிலை - அவ்வப்போது உண்டாகும் வாதப்பிரதி வாதங்களின் போக்கில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப பொறிபறக்கும் நிலையை எட்டிவந்தபோதிலும், கொழுந்து விட்டெரியும்நிலையை எட்டியுள்ளது இதுவே முதற்தடவையாகும்.

இதற்கான மூலப்பொறியை மிக அண்மையில் உருவாக்கிய வர் ஜனாதிபதியின் இந்நாள் ஆலோசகரும், முன்னாள் வெளியுறவு அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர்தான்.

திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கடற்படைத்தளம் உட்பட ஒட்டுமொத்தமாக திருகோணமலையின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், விடுதலைப் புலிகள் திருகோணமலையை முற்றாக தம்வசமாக்கக்கூடிய அபாய முள்ளதாகவும், கிழக்குப் பிராந்திய கடற்படைத்தளபதி ஒருவரின் அறிக்கையை மேற்கோள்காட்டி - இந்தியாவிலும், கொழும்பிலும் அபாயச்சங்காய் அவர் அலறத் தொடங்கியதையடுத்தே இந்தப் பிரச்சினை பூதாகாரமாகத் தொடங்கியது.

கதிர்காமர் தானாகத்தான் இந்த விவகாரத்தை கிளப்பி- அரசுக்கும், சமாதான செயற்பாடுகளுக்கும் சிக்கலை உருவாக்கி, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தவும், அதன்மூலம் சந்திரிகா மீதுள்ள தனது விசுவாசத்தை மேம்படுத்திக் காட்டவும் முயன்றாரா அல்லது சந்திரிகாவின் ஆலோசனையுடன் கூடிய ஒரு திட்டத்தின் அடிப்படையில்தான் இதனை மேற்கொண்டாரா என்று தெரியவில்லை.

எதுவானாலும், அதன் இலக்கு அரசுக்கும், சமாதான நகர்வுகளுக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவதேயாகும்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள்- சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும் இடையேயான முரண்பாட்டு மோதல்களை மிகவும் வெளிப்படையாகவே அதிகரிக்க வைத்துள்ளது.

திருமலை விவகாரம் உட்பட பாதுகாப்பு விடயங்களில் அரசாங்கம் பொறுப்பின்றி இருப்பதாகவும், நாட்டின் இறையாண்மைக்குப் பங்கம் ஏற்படும் வகையில் அரசு செயற்பட்டுவருவதாகவும் குற்றஞ்சாட்டி, ரணிலுக்கு சந்திரிகா ஒரு நீண்ட, காட்டமான கடிதமொன்றை எழுதியதைத் தொடர்ந்து, ரணில் - சந்திரிகாவின் ஆட்சிக்கால இராணுவ மற்றும் பாதுகாப்பு பின்னடைவுகளைப் பட்டியலிட்டு விபரித்து, பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக்காலத்தில்தான் நாட்டின் பாதுகாப்பு பெரும் பின்னடைவைச் சந்தித்ததாகவும், இராணுவம் ஆனையிறவு, முல்லைத்தீவு, கிளிநொச்சி உட்பட முழு வன்னியையும் இழந்ததாகவும் கடுமையாக விமர்சித்தும் கண்டித்தும், பதில் கடிதம் ஒன்றை சந்திரிகாவுக்கு எழுதியதையடுத்து எழுந்துள்ள நிலையே இன்றைய உச்சக்கட்ட முறுகலுக்குக் காரணம்.

ரணில் பொய் சொல்கிறார் என்றும், அவரின் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை எனவும், பிரச்சினைகளில் இருந்து அவர் நழுவ முயல்வதாகவும், ஜனாதிபதி செயலகம் குற்றம் சாட்டியது.

இதனையடுத்து, நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு பங்கம் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாட்டின் பல தரப்பினரும் கேட்டுள்ளதால், அடுத்த இருமாத காலத்தினுள் ஜனாதிபதி - தேசிய அரசியலில் முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி அறிவித்துள்ளது.

இந்த முக்கிய முடிவுகளில் ஒன்று - ரணிலின் ஆட்சியை இலக்குவைத்ததாகவே இருக்கும். அதாவது ஆட்சியைக் கலைக்கும் நோக்கைக் கொண்டதாகவே இருக்கும்.

எதிர்கொள்ள வேண்டிய தேர்தல்களை சந்திரிகா கவனத்தில் எடுத்து ஆராய்வாரேயானால், இத்தகைய ஆட்சிக்கலைப்பு முடிவு தொலைநோக்கு சிந்தனையற்றதாக இருப்பினும், அரசியல் சுயநல அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ள அவருக்கு அவசியமானதாக இருக்கலாம்.

அத்துடன் - தனித்தியங்கும் திராணியற்ற நிலையிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு, முறிந்துபோயுள்ள ஜே.வீ.பியுடனான உறவை ஒட்டவைத்துக் கொள்ளவேண்டிய நகர்வுக்கும் இந்த ஆட்சிக் கலைப்பு நகர்வும் நன்கு உதவவே செய்யும்.

எனவேதான் ரணிலின் கடிதத்துக்கு - இரண்டொரு தினங்களில் சந்திரிகா அனுப்பப்போகும் பதில் கடுமையான அதிகாரவலுவை வெளிப்படுத்தும் எச்சரிக்கைக் கடிதமாக இருக்குமென, அரசியல் ஆய்வாளர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

சகவாழ்வு அரசியலுக்கு இக்கடிதம் ஒரு முடிவாகவும் இருக்கலாமெனவும் கருதப்படுகிறது.

எதுவானாலும், இன்றைய சமாதான நிலை தொடர்வதும், அதனைப் பயன்படுத்தி ரணிலின் அரசு தனது ஆட்சியின் காலத்தை பாதுகாப்பாக சிக்கலின்றிக் கழிப்பதும், தனது அரசியல் எதிர்காலத்துக்கு ஆபத்தானது என்றே சந்திரிகா கருதுகிறார். இந்த ஆபத்திலிருந்து தன்னையும் தனது கட்சியையும் பாதுகாத்துக் கொள்வதே அவரின் இலட்சிய இலக்காகும். அதற்காகவே அவர் மேற்குறிப்பிட்ட முக்கிய முடிவுகளை எடுக்க முனையலாம்.

இதைவிடுத்து நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு என்று அவர் கூறுவதெல்லாம் வெறும் பம்மாத்துத்தான். ஊழலும் போர்வெறியும் கொண்ட சந்திரிகாவின் தலைமையிலான 1994-2000 வரையிலான ஆட்சி அவரின் தேசிய உணர்வின் போலித்தனத்தை நிரூபிக்க போதுமானதாகும்.

இன்றைய சந்திரிகா - ரணில் அதிகாரப் போட்டி எந்த வகையிலும் சிறிலங்காவின் பாதுகாப்பையோ, இறையாண்மையையோ உறுதிப்படுத்த உதவப்போவது கிடையாது. எல்லாவற்றையும்விட இந்த இருவரின் அதிகார மோதலே சமாதானத்திற்கான முற்றுப்புள்ளியை வைக்கும் நிகழ்வாகவும் இருக்கும்.

## நாடும் நடப்பும்




# சர்வதேச விடுதலை அமைப்புக்களின் பார்வைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தீர்வு யோசனைகள்!

## இராணுவப் புலனாய்வுப் பிரிவு அறிவிப்பு

விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள இடைக்கால திட்ட நகலை, சர்வதேச இயங்கங்களின் பார்வைக்கு அனுப்ப விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக, இராணுவப் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு வசதியாக, விடுதலைப் புலிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய இடைக்காலத் திட்டநகல் ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

இந்தத் திட்டநகல், அடுத்த மாதம் 15 ஆம் திகதி அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரசாங்கத்திடம் திட்டநகலைச் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, சர்வதேச விடுதலை அமைப்புக்களின் பார்வைக்கு- விடுதலைப் புலிகள் இதனைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற திட்டநகலை, சர்வதேச விடுதலை அமைப்புக்கள் ஏற்றுக்கொள்ளும் இடத்து, அந்த நகலை - அரசாங்கத்திடம் விடுதலைப் புலிகள் கையளிப்பர் என்றும்,

இந்த நிலையில், அரசாங்கத்திற்கு - விடுதலைப் புலிகளின் திட்டநகலை நிராகரிப்பது சாத்தியமற்றதொன்றாகவே காணப்படும் என்றும், இராணுவப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

## சர்வதேச சிரிப்பழகிப் போட்டியில் இலங்கைப்பெண் முதலாமிடம்!

இலங்கையைச் சேர்ந்த பிரசாந்தி பேரின்பநாயகம்- இவ்வாண்டிற்கான மணமான பெண்களுக்கான சர்வதேச சிரிப்பழகித் தெரிவுப்போட்டியில், வெற்றிக் கிரீடத் தைச் சுவீகரித்துக்கொண்டார்.

அமெரிக்காவின் - கலிபோர்னிய மாநிலத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், உலகளாவியரீதியில் 40 நாடுகளின் மணமான அழகுராணிகள் கலந்துகொண்டனர்.

சிரிப்பழகியாகத் தெரிவான பிரசாந்தி பேரின்ப நாயகம்- இலங்கையின் 2003 மணமான அழகுராணிப் போட்டியிலும் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றவர். அதன்மூலம் 51 நாடுகளின் அழகிகள் பங்குபற்றும், சர்வதேச மணமான பெண்களுக்கான அழகிப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப்பெற்றிருந்தார்.

இவர் கொழும்பு வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாகக் கடமைபுரிபவர். அத்துடன், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பேரின்பநாயகத்தின் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

## வன்னியில் வேலைத் திட்டங்களுக்கு எழுபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு!

### புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் வன்னி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூரினால் - 70 இலட்சம் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் முதலாவதாக - மன்னார் அரச செயலகத்தில் புனர்வாழ்வுக்கிளை திறந்து வைக்கப்பட்டது. முசலி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அகத்திமுறிப்புகுளம் புனரமைக்கப்படவுள்ளது. அத்துடன், போரினால் குடும்பத்தலைவர்களை இழந்த பெண்களுக்குச் சுயதொழிலை பெற்றுக்கொடுக்க, தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று, மன்னார் - தாராகுண்டுப் பகுதியிலுள்ள அரச காணிகள் - 50 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. நானாட்டான் பிரதேசத்திலுள்ள அளவக்கை கிராமத்துக்கு, மின்சாரம் வழங்கும் நடவடிக்கை போன்ற வேலைத்திட்டங்களும் இதற்குள் அடங்கும். (201)

# விடுதலைப் புலிகளுக்கு ம.தி.மு.கழகம் எப்போதும் தனது ஆதரவை வழங்கும்!

## மத்திய அமைச்சர் கண்ணப்பன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு - ம.தி.மு.க. தொடர்ந்தும் தார்மீக ஆதரவு வழங்குமென்று, அந்தக் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் கண்ணப்பன் தெரிவித்தார்.

மத்திய மரபுசாரா எரிசக்தித்துறை அமைச்சர் மு.கண்ணப்பன் - நேற்றுமுன்தினம் கோவையில் நிருபர்களுக்குப் பேட்டியளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாக நாடாளுமன்றத்தில் பல உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இதனையடுத்து, பொடா மறுசீரமைப்பு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

'தியாக நெருப்பில் வைகோ' என்ற புத்தக வெளியீட்டு விழா - சென்னையில் நடந்தது. அப்போது அவர் பேசுகையில், தமிழர்களுக்கு ஆதரவாகவும், பாதுகாப்பாகவும் செயற்படும் விடுதலைப் புலிகளை - நாங்கள் ஆதரிப்போம் எனத் தெரிவித்தோம். அதேபோல், இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்காக எந்த அமைப்பு குரல் கொடுத்தாலும், அதை நாம் ஆதரிப்போம். இது எங்கள் இயக்கத்தின் கருத்து. நாங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவி செய்வோம் என்றோ, பொருளுதவி செய்வோமென்றோ கூறவில்லை. நாங்கள் தார்மீக ஆதரவுதான் கொடுக்கின்றோம்.

என்னைக் கைதுசெய்ய தமிழக அரசு விரும்பினால், தாராளமாகச் செய்யட்டும்.... எங்கள் மீது பொடா வழக்குப் போட்டாலும், அதனைச் சந்திக்கத் தயாராகவே உள்ளோம். நாங்கள் சட்டவிரோதமாக எதையும் பேசவில்லை.'

எம்.ஜி.ஆர். ஆட்சியிலிருந்தபோது, விடுதலைப் புலிகளுக்குப் பணவுதவி செய்தார். அதேபோல், ஜெயலலிதாவும் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியுள்ளார்.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளை ஆதரிக்காத கட்சிகளிலில்லை. அதேபோல்தான், நாங்களும் ஆதரவு தெரிவிக்கிறோம் என்று கூறினார்.

## போதனா வைத்தியசாலையில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அண்மைக் காலமாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. ஒன்றரை மாத காலப்பகுதிக்குள் நான்கு சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் ஒருவருடைய புதிய சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவ நேரம் - பாதுகாப்பு ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சைக்கிள் திருட்டுக்கள் தொடர்பாக, யாழ்ப்பாணம் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வைத்தியர்கள் இருவரின் மோட்டார் சைக்கிள் பற்றரிகளும் களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மைக்காலமாக யாழ். நகரப்பகுதிகளில் சைக்கிள் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கட்சிகள் அறிக்கை அரசியல் நடத்த கடித அரசியல் நடத்தும் சந்திரிகா-ரணில்

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் அறிக்கைகளும், கடிதங்களும் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டன. இந்த அறிக்கைகளும், கடிதங்களும் மக்கள் சேவைகளுக்காக அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்படுவதில்லை. அவை வீணே தங்களுக்கு இடையிலான விமர்சனங்களுக்கும், கட்சி அரசியலுக்குமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

சாதாரண கட்சிகள் முதல் பெரிய கட்சிகள் வரையில் இதில் வேறுபாடுகள் இல்லை என்றே கூறவேண்டும்.

சில ஊடக அலுவலகங்களைச் சென்று



பார்த்தால் - அங்குவரும் கடிதங்களும், அறிக்கைகளும் - இலங்கை அரசியல் இந்தளவு தூரம் மோசமாகப் போய்விட்டதோ? என எண்ணத் தோன்றும். அரசியல்வாதிகள் மக்களுக்காக வெளியிடும் அறிக்கைகள், உரியவர்களைச் சென்றடைந்து, மக்களுக்கு அது நன்மை பயக்கிறதா? எனப் பார்த்தால், அப்படி இல்லை என்றே கூறவேண்டும். அரசியல்வாதிகளும் - தமது அறிக்கைகள் அல்லது கடிதங்கள் என்பன ஊடகங்களில் ஒலிபரப்பப்பட்டு அல்லது அச்சிடப்படும்போது, அதில் ஒரு இடத்தில் தமது பெயர் வந்துவிட வேண்டும் என்பதில் மாத்திரமே கவனமாக இருக்கின்றனர்.

விடயம் எதுவாக இருந்தால் என்ன? தமது பெயரில் அறிக்கை ஒன்று வெளிவந்தால், அதுவேபோதும் எனத் திருப்திகொள்ளும் அரசியலே இன்று பொதுவாக நிலவுகிறது. இதில் தமிழ்க் கட்சிகளாக இருந்தாலென்ன, சிங்கள மற்றும் முஸ்லிம் கட்சிகளாக இருந்தாலென்ன? அனைத்துமே ஒரேதரத்திலேயே வைத்துப் பார்க்கக்கூடிய நிலையிலிருந்து வருகின்றன.

சிங்களக் கட்சிகளைப் பொறுத்தவரையில், இன்று ஒரு விடயம் பெரிதாகவேண்டும் என்பதற்காக, வீணே பிரச்சினை ஒன்றை வைத்து அறிக்கைகளை வெளியிடும்நிலை நிலவுகிறது. இதற்கு உதாரணமாக - மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.வி.பி, அண்மையில் தகவல் ஒன்றை வெளியிட்டிருந்தது.

இலங்கைக்கு வெளிநாட்டுப் படைகள் சமாதானப் படைகளாக வரப்போகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை அந்தக் கட்சி வெவ்வேறு இடங்களிலும் தெரிவித்து வந்தது. ஆனால், இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்டபோது, அதற்கு எந்த பதிலுமே வழங்கப்படவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியும் அண்மைக் காலமாக, நாட்டில் புதிய ஆட்சி ஒன்று ஏற்படுத்தப்படப்போகிறது என்ற விடயத்தை, அடிக்கடி அறிக்கையாக வெளியிட்டு வருகிறது, மேடைகளிலும் பேசிவருகிறது. ஜனாதிபதியும் பல்வேறு இடங்களிலும், இதனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு அச்சுறுத்தலாகப் பயன்படுத்தி வருகிறார்.

ஆனால், ஜனாதிபதிக்குப் புதிய ஆட்சி ஒன்றை அமைக்கக்கூடியதான அரசியல் பலம் இன்னமும் வந்துவிடவில்லை என்பது, அவர் இந்த விடயத்தைக் கூறிவரும் நீண்டகாலத்தைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். நடக்க முடியாத காரியங்களை மக்கள்முன் எப்போதும் கூறிக்கொண்டிருப்பதால், அது நடந்துவிடுமோ என்ற உணர்வை மக்கள் மனதில் உருவாக்கமுடியும் என்பதை அரசியல்வாதிகள் முழுமையாகவே தெரிந்து வைத்துள்ளனர். எனவேதான், இந்த அறிக்கைக் கலாசாரத்தை, அரசியல் கலாசாரத்திற்குள் இணைத்துப் பார்க்கப் பழகிக்கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி தம்முடன் மக்கள் இணைந்திருக்கவேண்டும் என்பதற்காக இந்த அறிக்கைக் கலாசாரத்தை ஒரு மூலமாகக் கொண்டுள்ளது. நாட்டின் அபிவிருத்தி தொடர்பிலும், சமாதானம் தொடர்பிலும், அந்தக் கட்சி பல அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

இந்த அறிக்கைகளில் குறிப்பிடக்கூடிய ஒன்றாகக் கூறக்கூடியது - பிரதம நீதியரசரைப் பதவி நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற விடயமாகும். ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் - பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதால், அவரைப் பதவியிலிருந்து அகற்ற நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவரப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி - பாரிய பிரசாரத்தை முன்னெடுத்தது. ஆனால், இன்றுவரை அது கைகூடவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் மாறிமாறி, ஒரு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறு கட்சிக்கு வரப்போகிறார்கள். தமது பலம்கூடப் போகிறது எனக் கூறிவருகின்றன.

ஆனால், எந்த ஒரு கட்சியும் கூறிய அளவிற்கு, இதுவரை உறுப்பினர்களின் கட்சி மாற்றங்கள் இடம்பெறவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியில் முக்கிய அமைச்சராக இருந்த ரிச்சட் பத்திரன, ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறுவது மாத்திரமே இப்போதைக்கு உறுதியான விடயமாகும். இந்த இரண்டு கட்சிகளைக் காட்டிலும், ஏனைய சிறுகட்சிகளும் இன்று அறிக்கைமூலமே அரசியலை நடத்தி வருகின்றன.

சில கட்சிகளுக்கு ஊடக அலுவலகங்கள் எனத் தனியான அமைப்புகளும் தற்சமயம் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்கள்- தினந்தோறும் வெளியாகும் செய்திகளைப் பதிவுசெய்து, அவற்றுக்கு விமர்சனம் கூறுவதும், அந்தச் செய்திகளுடன் தமது கட்சியைத் தொடர்புபடுத்தும் தகவல்களையும் வெளியிட்டு வருகின்றன. ஒரு சிறிய பிரச்சினையானாலும் கூட, அதனை தமது அறிக்கைகளாலும், விமர்சனங்களாலும் பெரிதுபடுத்தும் விடயங்களையே இந்தக் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

போர்நிறுத்த உடன்பாடு, அம்பாறை வலத்தாபி பௌத்த சின்னங்கள், கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்குத் தனியான அலகு, யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், திருகோணமலை குரங்குப்பாஞ்சான் முகாம், வவுனியாவில் புலிக்கொடி ஏற்றல் நிகழ்வுகள், மட்டக்களப்பில் அரசியல் கொலைகள், கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கைப் பகுதிகளிலும் நடைபெற்று வருகின்ற தொழிற்சங்கப் போராட்டங்கள், மலையகத்தில் இடம்பெறுகின்ற தொழிற்போராட்டங்கள் போன்றவை, அண்மைக்காலமாகக் கட்சிகளிடையே அறிக்கைகளாக வெளியிடப்பட்டுவரும் விடயங்களாகும்.

இந்த விடயங்களை அரசாங்கதரப்பு ஒரு கோணத்தில் நோக்கி, தகவல் வெளியிட்டு வரும் அதேநேரம், ஏனைய கட்சிகள் மாற்றுக் கோணத்தில் தமது அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. இந்த அறிக்கைகள் பெரும்பாலும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சிகளுக்கு உதவுவதைக் காட்டிலும், பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தவே உதவுகின்றன என்பது உண்மையாகும்.

அரசாங்கம் குறிப்பிட்ட விடயங்களில் எடுக்கின்ற முன்னெடுப்புகள், குறிப்பிட்ட கட்சிகளின் அறிக்கைகள் காரணமாக, மாற்று முடிவுகளையும் கொடுத்துவிடக் கூடியவையாக இருக்கின்றன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சிஹல உறுமய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தேசிய தொழிலாளர் சங்கம், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி போன்றவை, தமது அலுவலகங்களில் ஊடகப்பிரிவு ஒன்றை நடத்தி வருகின்றன. இதன் மூலம், பெரும்பாலும் தினந்தோறும் இந்தக் கட்சிகள், ஏதோவொரு விடயம் தொடர்பில் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

இந்த அறிக்கைகள், சிலவேளைகளில் எந்த ஒரு காரியத்தையும் செய்யக்கூடிய வல்லமை பெற்றிருக்காதபோதும், ஊடகங்களில் தமது கட்சியின் பெயர் வரவேண்டும் என்பது மாத்திரமே, குறிப்பிட்ட கட்சிகளின் நோக்கமாக இருந்து வருவதைக் காணலாம். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் போன்ற கட்சிகள், அவ்வப்போது மாத்திரமே அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க, இன்று கடிதப் பரிமாறல்கள் பிரதான அரசியல் அம்சங்களாக மாறியுள்ளன. சிறிய கட்சிகளைப் பொறுத்தமட்டில், இந்தக் கட்சிகள் மக்கள் பிரச்சினை ஏதாவது தொடர்பில், அரசாங்கத்துக்கு அல்லது உரிய நிறுவனங்களுக்கோ கடிதங்களை அனுப்புகின்றன. அவற்றின் பிரதிகள் ஊடகங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

இந்தக் கடிதங்களுக்கு, பதில்கள் கிடைக்கின்றனவா என்பது சந்தேகமே. பெரும்பாலான கடிதங்களுக்கு அரசாங்கத்தினரோ அல்லது உரிய நிறுவனங்களுக்கோ பதில் அனுப்பப்படுவதில்லை.

ஆனாலும், குறிப்பிட்ட கட்சிக்குள் இதனைப் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை. மக்கள் வந்து தமது குறைகளைத் தெரிவிக்கும்போது அல்லது ஊடகங்கள்மூலம் மக்களின் குறைகளைத் தெரிந்துகொள்ளும்போது மாத்திரம், தமது பொறுப்பு எனக்கருதி, கட்சிகள் - கடிதங்களை அனுப்புகின்றன.

சில கட்சிகள் கடிதங்களை அனுப்பிவிட்டாலும், ஊடகங்களின்மூலம் தமிழ்மக்கள் கோரிக்கைகளுக்காகக் கடிதங்களை அனுப்பியிருப்பதாகப் பிரசாரங்களை மேற்கொள்கின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்போனால், கட்சிகள் குறிப்பாக, மலையகத்தின் பெரும்பாலான கட்சிகள், மக்களின் கோரிக்கைகள் தொடர்பாக இந்தக் கடிதங்கள்மூலம் அரசியலை நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு, இன்று நாட்டின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம மந்திரியும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதியும், தமக்கிடையிலான நாட்டுப்பிரச்சினை தொடர்பாகக் கடிதப் பரிமாற்றங்களை மேற்கொண்டு வருவது இயல்பாகிவிட்டது. அதிலும் இருவரும் - தமது அதிகாரத்தின் அடிப்படையில் கடிதங்களைப் பரிமாறிக்கொள்வது, நாட்டு மக்கள் மத்தியில் தினந்தோறும் செய்திகளாக உலவி வருகின்றன. ஜனாதிபதி - பிரதமர் மீது குற்றம் சுமத்துவதும், அதற்குப் பிரதமர் பதில் அனுப்புவதும் நாளாந்த நடைமுறைகளாகிவிட்டன. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இடம்பெறும் கடிதப்பரிமாற்றங்கள் நாட்டின் பிரச்சினையை அல்லது அவர்களின் அதிகாரங்களை, மக்கள் மத்தியில் புரியவைக்கிறதோ? அல்லது ஒவ்வொருவரினதும் நியாயங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்கிறதோ? இதில் எதுவும் நடக்கவில்லை.

ஆனால், இருவரும் தமக்கிடையில் இருக்கும் அதிகார இயந்திரங்களின் வலிமைகளை - தமது வாக்காளர்களுக்குப் புரியவைப்பதற்கு, இந்தக் கடிதப்பரிமாறல்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்தக் கடிதப்பரிமாறல்களில் மக்களுக்கு நன்மைகள் ஏற்படுவதில்லை. ஆனால், மக்களுக்குப் புதிய தகவல்களைப்



பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இது இறுதியாக ஜனாதிபதியினால், பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் - திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கடற்படை முகாம் என்பவற்றுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது, அரச பாதுகாப்பு - தளர்வுப் போக்கின் காரணமாகவே ஏற்பட்டதாக ஜனாதிபதி கூறியிருந்தார். இதற்குப் பிரதம மந்திரி அனுப்பியிருந்த பதிலில் - திருகோணமலை துறைமுகத்திற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட, பொதுஜன ஐக்கிய முன்னணியே காரணம் என, தமது பதிலில் தெரிவித்திருக்கிறார். அத்துடன், 1995 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிழையான இராணுவ நகர்வு காரணமாகவே, சம்பூரிலிருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகள் - கனரக ஆயுதங்களை - திருகோணமலைக்கு நகர்த்தியுள்ளனர்.

எனவே, இன்று திருகோணமலைத் துறைமுகத்துக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டமைக்கு, சமாதான முயற்சியைக் காரணம் கூறுவது பொருத்தமானதல்ல என்று, பிரதம மந்திரி தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பொதுஜன ஐக்கிய முன்னணியின் காலத்தில், **A-9** வீதியினை விடுவிக்க எடுத்த முயற்சியின்போது, படையினர் கண்ட தோல்விகளையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதம மந்திரியின் இந்தப் பதிலைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி 'தடியைக் கொடுத்து அடிவாங்கிய' கதையாகவே



கருதஇடமுண்டு. ஆனால், ஜனாதிபதி இதோடு விடுவாரா என்பது சந்தேகமே?

ஜனாதிபதி தனது கடிதத்துக்குப் பிரதமர் பதில் அனுப்பிவிட்டார் என்றில்லாமல், அந்தப் பதில் மீண்டும் தன்னைக் கடிதம் எழுதத் தூண்டிவிட்டதாகவே நினைக்கிறார். அதனடிப்படையில், பிரதமந்திரியைக் குற்றம் சுமத்தி, கடிதம் ஒன்றை ஜனாதிபதியின் செயலகம் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

இது இவ்வாறிருக்க, கடந்தவார அரசியலில் மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பு முறிவுக்கு, ஜனாதிபதி முக்கிய காரணங்களை முன்வைத்துள்ளார். கட்சிமுறிவுக்குப் பதவிகள் காரணமாக அமையவில்லை என, மக்கள் விடுதலை முன்னணி கூறியிருந்தபோதிலும், அதுவே காரணம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்புப் பேச்சுவார்த்தை முடிவடைந்ததையடுத்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் - இந்த முறிவுக்குக் காரணம் என்ன என்பதை விளக்குவதற்காக, ஜனாதிபதி கடந்தவாரம் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் அழைத்திருந்தார். அன்றையதினம் தேசிய பிக்குமார் முன்னணி கொழும்பில் நடத்திய சத்தியாக்கிரகத்துக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைச் செல்லவிடாது தடுப்பதற்காகவே, ஜனாதிபதி இந்தக் கூட்டத்தைப் பிற்பகல் 2 மணிக்குக் கூட்டியிருந்தார். இதனால், தேசிய பிக்குமார் முன்னணியின் சத்தியாக்கிரகத்துக்கு, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லமுடியவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் - ஜனாதிபதியின் கூட்டத்திற்கு வருகை தந்தனர். அவர்கள் அனைவரும் தீர்க்கமான விடயமொன்றை ஜனாதிபதி கூறப்போகினறார் என எதிர்பார்த்தே, இந்தக் கூட்டத்திற்கு வருகை தந்தனர். இதில் பெரும்பாலானோர்- மக்கள் விடுதலை முன்னணியுடன் மீண்டும் கூட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாகவே ஜனாதிபதி கூறப்போகிறார் என ஆவலாக இருந்தனர்.

ஆனால், ஜனாதிபதி தனது பேச்சில், பிரதமர் ரணிலின் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் விருப்பங்களுக்கேற்ப - பிரதமர் ரணில் நடந்து கொள்கிறார். எனவே, அவரின் அரசாங்கத்திற்கு எதிராக கூட்டமைப்பு ஒன்று அவசியம் என ஜனாதிபதி கூறினார். ஆனால், அது மககள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பாக அமையாது என ஜனாதிபதி கூறியதும், கூட்டத்தில் இருந்த பலரின் முகங்கள் கடுமையாகின.

இந்தநிலையில், மங்கள சமரவீர, ஸ்ரீபதி சூரியராட்சி, திலான் பெரேரா போன்றோர், மீண்டும் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் தான், மீண்டும் நாம் அரசாங்கம் ஒன்றை அமைக்கமுடியும் எனத் தெரிவித்தனர்.

இதனால், கோபமடைந்த ஜனாதிபதி, மக்கள் விடுதலை முன்னணி- உயர்கல்வி, விவசாயம், பிரதிப் பாதுகாப்பு அமைச்சுக்களைக் கேட்பதாகவும், அவற்றைக் கொடுக்கமுடியாமையினால்தான் - மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பை, தான் விரும்பவில்லை எனவும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. ◆

## கடவையைக் கடக்க முற்பட்ட பஸ்ஸுடன் ரயில் மோதியது

# பாகிஸ்தானில் நடந்த கோர விபத்தில் 25 பயணிகள் பரிதாபமாக உயிரிழப்பு!



ரயிலும் - பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில், 24 பொதுமக்கள் பலியாகினர். பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்திலிருந்து 150 கிலோமீற்றருக்கு அப்பால் அமைந்த மலிக்வால் என்ற இடத்திலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

புகையிரதப் பாதையை பஸ் கடக்க முற்பட்டவேளையில் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். பஸ்லில் பயணம்செய்த பயணிகளில் 20 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். பஸ் முற்றாகச் சேதமடைந்தது.

காயப்பட்டவர்களில் மேலும் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால், உயிரிழப்பு இன்னும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

விபத்து நடந்த இடத்தில் பாதுகாப்புக் கடவையோ, எச்சரிக்கை சமிக்ஞை விளக்குகளோ இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து நடந்த ரயில்வே கடவையில் கடந்த இரு ஆண்டுகளுக்குள் நடந்த மூன்றாவது விபத்து என அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

# லைபீரியாவுக்கு மேலும் 15,000 படையினர்; ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை முடிவு!

15 ஆயிரம் சமாதானப் படையினரை லைபீரியாவுக்கு அனுப்புவதென, ஐ.நா பாதுகாப்புசபை ஏகமனதாக முடிவுசெய்துள்ளது.

லைபீரிய அரசுக்கும் போராளிகளுக்கும் இடையே கடந்த மாதம் ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையின் அமைப்பொன்றை லைபீரியாவில் உருவாக்க வேண்டுமென, அமெரிக்கா கேட்டிருந்தது.

அங்கு அனுப்பப்படும் படையினரின் முக்கிய நோக்கம் - பாதுகாப்பை பலப்படுத்துவதும், போராளிகள் 30 ஆயிரம் பேரிடமிருந்து ஆயுதங்களைக் களைவதுமாகும்.

இதேவேளை - போராளிகளுக்கும் லைபீரிய அரசுக்கும் இடையே மீண்டும் சமாதானத்தைக் கொண்டுவருவதில் நைஜீரியா முக்கிய பங்கினை வகிக்கிறது. இதற்காக, தனது 3500 படையினரை சமாதான நடவடிக்கைகளுக்காக லைபீரியாவுக்கு அனுப்பியுள்ளது.

நைஜீரியாவின் சமாதானப் படையினர் நகர்ப்புற வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்துள்ள போதும், கிராமப்புறங்களில் அதுசாத்தியமாகவில்லை.

ஐ.நா. பாதுகாப்புச் சபையால் அனுப்பப்படவுள்ள சமாதானப் படையில் 1000 பொலிஸாரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருந்தபோதிலும் ஐ.நா பாதுகாப்புச் சபையின் திட்டத்திற்கு



தமது படையை அனுப்ப எந்த நாடுகளும் முன்வரவில்லை. இது தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடன் ஐ.நா பாதுகாப்புச்சபை பேச்சுக்களில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாபர் மசூதி அழிப்பு விவகார வழக்கிலிருந்து இந்திய துணைப் பிரதமர் அத்வானி விடுதலை!



(புதுடெல்கி)

அயோத்தியில் 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உத்தரப்பிரதேச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து இந்திய துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும், மனிதவள அமைச்சர் முரளி மனோகர் ஜோஸி உட்பட ஏனைய ஏழு பேரும் இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படவில்லை.

இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவித்தமை மகிழ்ச்சி அளிப்பதாகவும், எனினும் தன் சாகாக்கள் மீது குற்றஞ்சுமத்தியிருப்பது தனக்கு மனவருத்தத்தை ஏற்படுத்துவதாகவும் அத்வானி தெரிவித்தார்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் அத்வானி குற்றமற்றவர் என்று நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டமை, ஆளும் பாரதீய ஜனதாவுக்குக் கிடைத்த வெற்றி என, அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# ஈரானின் முதலாவது அணுசக்தி உலைக்கு எரிபொருள் வழங்கல் சாத்தியமில்லை!

## கழிவுப்பொருட்களை மீளப்பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே காரணம் என்கிறது ரஷ்யா!

ஈரானில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடாகியுள்ள முதலாவது அணுசக்தி உலைக்கான எரிபொருளை உடன் வழங்குவதற்கான சாத்தியங்கள் இல்லையென ரஷ்யா தெரிவித்துள்ளது.

அணுஉலையின் எரிபொருள் சக்திக்கு பாவித்த கழிவுப் பொருட்களை ஈரானிடம் இருந்து திரும்பவும் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தடங்கல்களே அணுஉலைக்கான எரிபொருளை உடன் வழங்குவதற்கான சாத்தியங்களைக் குறைத்துள்ளதாக ரஷ்யாவின் அணுசக்தி அமைச்சர் தெரிவித்தார்.

ரஷ்யா 800 மில்லியன் டொலர் பெறுமதியான அணுசக்தி உலைகளை ஈரானில் அமைத்துவருகிறது.

ரஷ்யாவின் இந்தச் செயலுக்கு பலமான எதிர்ப்பைத் தெரிவித்துவரும் அமெரிக்கா, அணுசக்தி என்ற போர்வையில் ரஷ்யா சட்டவிரோதமாக அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, ஐக்கியநாடுகள் சர்வதேச அணுசக்தி அமைப்பு பி.பி.சி செய்தியாளருக்கு கருத்துத் தெரிவிக்கும்போது ஈரான் தனது அணுஉலை தொடர்பான செயற்பாடுகளைத் தெரிவித்தால் மாத்திரமே - பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகியநாடுகள் அதற்கான தொழில்நுட்பத்தை ஈரானுடன் பகிர்ந்துகொள்ள முடியுமெனத் தெரிவித்தார்.

## உலக நோக்கு

# ஐ.ஆர்.ஏ. இயக்க சந்தேகத்தில் 17 வயது இளைஞன் மீது வழக்கு!

(லண்டன்)

பிரிட்டனில், ஐ.ஆர்.ஏ இயக்கச் சந்தேக நபர் என்று, 17 வயது இளைஞன் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருடன் இணைந்து சமூகசேவையில் ஈடுபட்ட கத்தோலிக்கர்களை மிரட்டியதாக கைதுசெய்யப்பட்ட 5 பேரில், ஐ.ஆர்.ஏ. இயக்கத்தை சேர்ந்த மேற்படி இளைஞனும் அடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.




முந்தாநாள் வெள்ளிக்கிழமை மாலை ஐந்தரை மணியிருக்கும் நாவலர் வீதி - பிறவுண் வீதிச் சந்தியில் சிறு வாகன விபத்து.

நாவலர் வீதி வழியாக வந்து பிறவுண் வீதிக்குத் திரும்பிய மோட்டார் கார் ஒன்று, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதிவிட்டது. இரண்டு வாகனங்களும் அதிவேகமாக வரக்கூடிய வாய்ப்பில்லாத இடமாதலால் இருதரப்புக்கும் சேதம் ஏதுமில்லை!

ஆனாலும், மோட்டார் சைக்கிள் கீழே விழுந்துவிட்டது; இதில் பின்னாலிருந்து வந்தவருக்கு வயிற்றில் சிறிது நோ ஏற்பட்டது; மன அதிர்ச்சியில் பாதிக்கப்பட்டார். விபத்து நடந்ததும் சனங்கள் கூடிவிட்டனர். மோட்டார் சைக்கிள்காரர் பொலிஸுக்கு போன் செய்தார். அவர்கள் உடன் வருவதாகச் சொன்னார்கள். பொலிஸ் வரும் மோட்டார்காரை எடுக்க வேண்டாம் என்று அவர் சொன்னார். இரண்டு மூன்று நிமிடங்கள் கழிந்தன. மோட்டார் காரில் வந்த ஒருவர் கீழே இறங்கி விபத்துக்குள்ளான வாகனங்கள் இரண்டையும் சுற்றிவந்து பார்த்தார், பின்னர் கார் செலுத்தி வந்தவரைப் பார்த்து, காரை எடு என்று சொல்லியபடியே காரில் ஏறினார். கார் போய்விட்டது.

"வண்டிக்கு ஒரு சேதமுமில்லை. ஆனால் காரில் வந்த மூவரும் நல்ல மதுபோதையிலிருந்தனர். பொலிஸ் வந்தால் அவர்கள் மாட்டுவினம். அதுக்காகத்தான் பார்த்தன்" என்று மோட்டார் சைக்கிள்காரர் சொன்னார்.

கூடிநின்ற சனங்களில் சிலர் ஆளுக்கு ஆள் நியாயம் பேசிவிட்டுக் கலைந்து சென்றனர். பொலிஸ் வந்ததா?, வந்திருந்தாலும் நேரம் கழித்துவந்து என்ன பிரயோசனம்? பொலிஸ் வரவேயில்லை!

இதேசமயம் அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத் தடுக்கவேண்டிய அவசியம் பற்றி தமிழீழக் காவல்துறையினர் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

வாகனங்களின் வேகம்; வாகனம் செலுத்துவதில் பின்பற்றவேண்டிய ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படாமை, வாகனச் சாரதிகள் ஓய்வில்லாமல் வாகனம் செலுத்துவதால் தூக்கமில்லாமல் ஏற்படும் விபத்து, பாதசாரிகள், வாகனங்கள் பற்றிக் கருத்தில் கொள்ளாது வாகனம் செலுத்துதல் பற்றி இப்பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

எங்கு விபத்து நடந்தாலும், அது நடந்தவுடன் காவல்துறையின் நடமாடும் விபத்துச்சேவைக்குத் தொலைபேசியில் அறிவித்த சில நிமிடங்களிலேயே பொலிஸ் வாகனம் ஒலியெழுப்பியபடியே வந்து நிற்கும்!

மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

எந்த மோட்டார் வாகனமும் ஆண்டு முடிவில் சகல பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவை வீதியில் செல்வதற்குத் தகுதியிருந்தால் மட்டுமே லைசன்ஸ் வழங்கப்படும்.

வீதிகளில் அதிவேகமாகச் செல்லும் வாகனங்களை முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டிருக்கும் புகைப்படக்கருவி படம் எடுத்துக் காட்டிக் கொடுக்கும்.

வீதிகளில் செல்லும்போது, வாகனத்திலிருந்து எந்த ஓசையும் கேட்காது.

பொதுமக்களை ஏற்றிக்கொண்டு செல்லும் வாகனங்களின் சாரதிகள் ஓய்வெடுப்பது சம்பந்தமான தகவல்கள் அந்தந்த இடங்களில் கிடைக்கும்.

வாகனங்களில் பயணம் செய்பவர்கள் பெல்ட் (பட்டி) மாட்டாமல் பயணம் செய்யமுடியாது.

குழந்தைகளுக்கு வாகனங்களில் தனி ஆசனம் இருக்க வேண்டும்.

வேகக்கட்டுப்பாடுகள் - வீதிகளில் முக்கிய இடங்களில் அறிவித்தல் மூலம் தெரிவிக்கப்படும். எந்த இடத்தில் வாகன நெருக்கடி என்பதும் முன்கூட்டியே வழியில் அறிவித்தல் மூலம் தெரிவிக்கப்படும்.

இவையெல்லாம் மேல் நாடுகளில் நடைமுறையிலுள்ளவை.

இவற்றிற்கேற்றால் போல அங்கு வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமை நமது நாட்டில் ஏற்படுத்துவதற்கு நூறு வருடங்களானாலும் நடக்குமா?

அதற்காக இவ்விபத்துக்களைக் கட்டுப்படுத்தக் கூடாதா, என்ன?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மீளக்குடியமர்வுக்கு படையினர் விதிக்கும் தடை; முற்றுமுழுதாக இராணுவ நலன்சார்ந்ததாகும்!

## வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் கண்டன அறிக்கை

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை - மீளக்குடியமரப் படையினர் தொடர்ந்தும் தடுத்துவருவது வெறுமனே இராணுவரீதியான நலனை மாத்திரமே கருத்தில் கொணடு, படைத் தளபதிகள் எடுத்துவரும் நடவடிக்கையாகும். மக்களை மீளக் குடிய மர்த்துவது மனிதாபிமானப் பிரச் சினையாகப் படையினர் கருதவில்லையென வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

அண்மையில், உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில், மீளக்குடியமர்த்துவதற்குப் படைத்தரப்பு இணங்காமையைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 20 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீள தமது சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாதுள்ளனர். இவர்களை மீளக்குடியமர்த்துவதற்குப் படையினர் தடைவிதித்தமை, மீளக்குடியமரத் துடித்த மக்களை ஏமாற்றமடையச்செய்துள்ளனர்.

அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாதவேளை, படையினர் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மக்களை மீளக்குடியமர அனுமதிக்காமை சட்டத்துக்கு முரணானது.

இராணுவத்தினருடைய பாதுகாப்பு வலயப்பகுதிகளிலுள்ள பொது மக்களது கட்டடங்கள் இடிக்கப்பட்டு வருவதுடன், பொருட்களும் சூறையாடப்பட்டு வருகிறது. படையினர் மேற்கொண்டுவரும் இந்த நடவடிக்கையை அரச அதிகாரிகள் தலையிட்டு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என, வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்துவது தொடர்பாக ஆலோசனைகளை எதிர்வரும் 28 ஆம் திகதி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி ஒன்றியத்தின் கூட்டத்தில் வைத்தே, மேற்படி கண்டன அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(68)

## நாற்சந்தி



அமெரிக்கா விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குமாறு கூறுகிறது.

சாத்தியமான வரைவில் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு கனடா வலியுறுத்துகிறது.

விரைவில் பேச்சுவார்த்தையைத் தொடங்கினால்தான், அபிவிருத்திக்கான நிதியுதவிகளை வழங்கமுடியும் என்கிறது ஜப்பான்.

சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க இருதரப்பினரும் விரைவாகச் செயற்படவேண்டும் என்கிறது பிரிட்டன்.

இன்றும் எத்தனையோ நாடுகள் இதையே ஒப்புவிக்கின்றன, வலியுறுத்துகின்றன.

ஆனால், எவருமே பேச்சுவார்த்தைகள் இடைநடுவில் நின்றுபோனமைக்கான காரணங்களை ஆராய்ந்து, அதனை நியாயபூர்வமாக தீர்க்க முயல்வதாகத் தெரியவில்லை - இதுதான் பிரச்சினை.

எல்லாருக்குமே எல்லாமும் தெரியும். ...ன் உண்மையின் பக்கம் நின்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்பேச முன்வருகிறார்களில்லை - அதுதான் சர்வதேச ஜனநாயகக் கோட்பாடு.

சமாதானத் தீர்வு அரசியலை முடித்துவிடும், சமாதானப் பேச்சுவார்ததை அரசியலை தொடர உதவும் எனில் எந்த அரசியல்வாதிதான் தீர்வை விரும்புவான் - என்கிறார் சோமண்ணை...



-தெருவாசி

# சவூதி சிறைச்சாலை தீவிபத்தில் இலங்கையருக்கு பாதிப்பில்லை

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

சவூதி றியாத் நகரில் சிறைச்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் இலங்கையர் எவரும் பாதிப்புக்குள்ளாகவில்லை என வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையில் தீ விபத்து ஏற்பட்டபோது, இலங்கையர் ஆறு பேர் சிறைச்சாலையில் இருந்தனர் என்றும், இவர்கள் தற்போது எதுவித பாதிப்புக்கும் உள்ளாகாமல் இருப்பதாகவும் வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைத் தூதுரகம் - சவூதி அரசோடு தொடர்புகொண்டு, இந்தத் தகவலை அறியத்தந்துள்ளதாக, வெளிநாட்டமைச்சின் ஊடகச் செயலாளர் சிசில் குணசேகர தெரிவித்துள்ளார்.

சவூதிச் சிறைச்சாலையில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டு, 67 பேர் மரணமான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் இலங்கையர் எவராயினும் உயிரிழந்துள்ளனரா என்பதனை அறிவதில், இலங்கை மக்கள் கவலையோடு இருந்தனர்.

இந்த நிலையில், வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையொன்றை வழங்குமாறு, சவூதியிலுள்ள இலங்கைத் தூதுவர் அன்சாருக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனையடுத்து இலங்கைத் தூதுவர் அன்சார் அறிவித்துள்ள தகவலின்படி, இலங்கையர் எவரும் தீ விபத்தில் பாதிக்கப்படவில்லை என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

# யாழ்ப்பான நகர மத்தியில் விரைவில் பிரெஞ்சுமொழி நிலையம் அமையும்!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சுமொழி நிலையம் ஒன்று அமைப்பது தொடர்பாகவும், யாழ்.நகரில் அமைந்துள்ள திறந்தவெளியரங்கைப் புனரமைப்பது தொடர்பாகவும்ஆய்வுசெய்து, விசேட நிபுணததுவம் கொண்டவர்களை இப்பணியில் அமர்த்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா பிரான்ஸ் நாட்டின் வெளிநாட்டு இராஜாங்க அமைச்சர் ரெனால்ட் முசிலியரைச் சந்தித்த போதே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிங்கப்பூர் தூதுவர் டன்சாவோ மற்றும் வைத்திய நிபுணர் கமால் கோஷ் ஆகியோருடனான அமைச்சரின் சந்திப்பில், வடக்கு கிழக்குப் பகுதியில் முறிவு - நெறிவு தொடர்பான மருத்துவ முகாம் ஒன்றை நடாத்துவதற்கும், அதற்கென விசேட நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திலீபனின் நினைவு ஊர்தி இன்று முதல் வடமராட்சியில்!

தியாகதீபம்.லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி மக்கள் அஞ்சலிக்காக வடமராட்சிப் பகுதிக்கு இன்று எடுத்துச்செல்லப்படவுள்ளது.

இன்றுகாலை 8 மணிக்கு வடமராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை காரியாலயத்திலிருந்து சுடரேற்றப்பட்டு ஊர்தி பவனி ஆரம்பமாகும்.

தேசிய எழுச்சிப்பேரவையின் காரியாலயத்திலிருந்து ஊர்திபவனி ஆரம்பமாகி - நெல்லியடி சந்தி, மூத்தவிநாயகர் கோயில், குஞ்சர் கடைச்சந்தி, சோளங்கன் செல்வபுரம், விக்னேஸ்வராக் கல்லூரி, சம்பந்தர் கடை, அரசடி, கிழவிதோட்டம், கலிகை, இந்திரம்மன் கோவிலடி, மந்திகை, மாலுசந்தி, தேவரையாளி, சமரபாகு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை வீதிகள் ஊடாக மாவீரர் துயிலும் இல்லத்தைச் சென்றடையும்.

மறுநாள்காலை 8 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லத்திலிருந்து ஆரம்பமாகும் ஊர்திப் பவனி - உடுப்பிட்டி, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், வியாபாரிமூலை, சுப்பர்மடம், பருத்தித்துறை நகரம், தும்பளை, புலோலி, கிராமக் கோட்டடி, வடமராட்சி கிழக்கு, கற்கோவளம், மந்திகை, தெருமுடிமடம், தம்பசிட்டி, அல்வாய் வடக்கு, திக்கம் - வதிரி ஊடாக மக்களின் அஞ்சலிக்காக தென்மராட்சிப் பிரதேசத்துக்கு செல்லும்.

(116)

## திலீபனின்...

பட்டபோதும் மக்கள் கலைந்து செலலாது மலரஞ்சலியைத் தொடர்ந்து செலுத்தினர்.

தியாகி திலீபனின் திருவுருவப் பட ஊர்தி யாழ்.குடாநாடெங்கும் மக்கள் அஞ்சலிக்காக செல்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (68)

## கருணா - முஸ்லிம்...

ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் இரண்டுமணிநேரம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு, விவசாயம், மீன்பிடி, வியாபாரம் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்காக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் - மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு மாவட்டங்களிலும், இரண்டு பகுதியினருக்கிடையேயும் ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு, இரண்டு பகுதியினரும் இணைந்து வலயங்களை உருவாக்குதல், இந்த வலயங்களின் முதலாவது கூட்டம் இன்று காத்தான்குடியில் கூடுகின்றது.

இந்த வருட பெரும்போக நெற்செய்கையினை மேற்கொள்வது தமிழ, முஸ்லிம் மக்களின் வயல் காணிகளில் அவர்கள் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது.

இரு இனங்களும் தொடர்ந்து முரண்பட்டு நின்றால், பெரும்பான்மை சமூகத்திடமிருந்து எமது உரிமைகளைப் பெறமுடியாதென இங்கு உரையாற்றிய கேணல் கருணா தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பங்களிப்பு இல்லாமல் விடுதலைப் புலிகளும், முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு பிரச்சினைகளை பேசித்தீர்த்தது மிகவும் திருப்தியைத் தருவதாக, முஸ்லிம் தரப்பில் கலந்துகொண்ட ஐ.எம். இப்ராகிம் தெரிவித்தார்.

# இளம் பெண்ணின் சடலம் கரவெட்டி கிழக்கில் மீட்பு!

கரவெட்டி கிழக்கு அத்துளு அம்மன் கோவிலுக்கு அண்மையில் இளம் பெண்ணொருவரின் சடலம் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான முருகதாஸ் வசந்தகுமாரி (வயது 25) என்ற பெண்ணே மரணமடைந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை மேற்படி ஆலயப் பகுதிக்கு சென்றிருந்த அப்பகுதி மக்கள் சடலத்தை கண்டுள்ளனர். இந்தச் சடலம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதுடன், சடலத்துடன் அவரது அடையாள அட்டையையும் கண்டெடுத்துள்ளனர்.

மேற்படி சடலம் ஆலயப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டு மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் உறவினிடம் ஒப்படைக்கப்பட்டது. (202,09)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த கூட்டம் இன்றுகாலை 10 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

# இந்திய மீனவரின் சடலம் அரச செலவில் அடக்கம்!

அண்மையில் தலைமன்னாரில் கரைஒதுங்கிய இந்திய மீனவரின் சடலம் அடையாளம் காணப்படாமையினால், அரச செலவில நேற்றுமுன்தினம் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த சடலம் அநுராதபுர வைத்தியசாலைக்கு, சட்டவைத்திய பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. சட்ட வைத்திய பரிசோதனை முடித்து, மன்னார் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. இது அடையாளம் காணப்படாததையடுத்து, மன்னார் நீதிவான் எம்.எம்.அப்துல்லா - மன்னார் நகர பிரதேச செயலருக்கு, சடலத்தினை அரசசெலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார்.

இதற்கமைய, நேற்றுமுன்தினம் சடலம் அரசசெலவில் மன்னார் பொதுமயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (201)

## மூன்று பயிற்சி விமான...

கடந்த 2001 ஆம் ஆண்டு கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதலில் அழிக்கப்பட்ட பயிற்சி விமானங்களுக்குப் பதிலாக மூன்று பயிற்சி விமானங்களை இலகு கடன் அடிப்படையில் வழங்கவும் சீன அமைச்சர் முன்வந்துள்ளார்.

சமாதான காலமாக இருந்தாலும் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியுள்ளதாக திலக் மாரப்பன தெரிவித்தார்.

இதேவேளை 2001 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இரண்டு, பீரங்கிகள் பொருத்தப்பட்ட கடற்கலங்களின் விற்பனை தொடர்பான விடயத்தை மீளக் கருத்தில் எடுக்க வேண்டுமெனவும் அமைச்சர் திலக் மாரப்பன கேட்டுக்கொண்டார்.

ஆயுத தளபாடங்கள் கொள்வனவு செய்தமைக்காக சீனாவிலுள்ள நொறிங்கோ என்ற ஆயுத கம்னிக்கு 75 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்திவிட்டதாகவும், மிகுதிப் பணத்தினை இனிவரும் காலங்களில் படிப்படியாக அரசு செலுத்துமெனவும் மாரப்பன தெரிவித்தார்.

கலந்துரையாடலின் முடிவில் சீன துணை அமைச்சர், தனது நாட்டு பாதுகாப்பு அமைச்சர் சார்பாக திலக் மாரப்பனவை சீனாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

## ஜே.வி.பியின்....

கொழும்புக்கு வந்துள்ளார்களாம்.

இவர்கள் ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் மட்டுமல்ல மேலும் பல அரசியல் தலைவர்களையும் கொல்வதற்குத் திட்டம் வகுத்துள்ளார்கள். இடைக்கால நிர்வாக சபைக்கு இவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதனால், இவர்கள் இருவரும் புலிகளின் அச்சுறுத்தலுக்கு இலக்காகி இருக்கின்றனர் என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருக்கிறது.

## சந்திரிகாவின் விசேட...

கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், இராணுவ நடவடிக்கை இயக்குநர் பிரிகேடியர் நிமால் ஜெயசூரிய உட்பட படை அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

படையினரைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடிய எதிர்க் கட்சித் தலைவர், அவர்களை அதியுசார் நிலையிலும், மனஉறுதியுடனும் இருக்கவேண்டுமென வலியுறுத்திக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு திரும்பிய பின்னர், திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை ஜனாதிபதி சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் புலிகள் புதிய முகாம்களை அமைதது வருவதாக அரசாங்கத்தின் மீது ஜனாதிபதி சந்திரிகா பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்ததும், இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காட்டமான பதில் அனுப்பியிருந்ததன் பின்னணியிலுமே, எதிர்க்கட்சித் தலைவரை- ஜனாதிபதி சந்திரிகா திருகோணமலை அனுப்பி அங்குள்ள பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.